வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු





மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 30.01.2024 செவ்வாய்க்கிழமை | இதழ் : 30 | பக்கங்கள் : 12

# பகிழவதை குற்றம் நிரூபிக்கப்பட்டால்
# 12 ஆண்டு சிறை
## உயர்கல்வி அமைச்சர் அறிவிப்பு



**கொழும்பு, ஜனவரி 30**

**பகிடிவதைகள் தொடர்பான குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால், சந்தேகநபர் ஒருவருக்கு சுமார் 12 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை வழங்குவதற்கான சட்ட ஏற்பாடுகள் உள்ளன என்று உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.**

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த ஒரு இலட்சத்து 66 ஆயிரத்து 998 பேர் இம்முறை பல்கலைக்கழகங்களுக்கு தகுதிபெற்றிருந்தனர்.

இவர்களில் 84 ஆயிரத்து 150 பேர் பல்கலைக்கழகங்களுக்கான அனுமதிக்காக விண்ணப்பித்திருந்தனர்.

இந்தநிலையில், அவர்களில் 43 ஆயிரத்து 101 பேர் 11

## அரசுக்கு எதிராக பதிவிட்டவர் கைது

*கொழும்பு, ஜன. 30*

சமூக செயல்பாட்டாளரான பியத் நிகேஷல குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் கணனி குற்ற விசாரணை பிரிவால் நேற்று கைது செய்யப்பட்டார்.

வாக்குமூலமொன்றை பெற்றுக்கொள்வதற்காக அவர் நேற்று குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டிருந்ததுடன் வாக்குமூலம் பெறப்பட்டதன் பின்னர் கைது செய்யப் 11

## அரிசியில் தன்னிறைவு இனி இறக்குமதி இல்லை
### விவசாய அமைச்சர் மகிந்த

*கொழும்பு, ஜன. 30*

அரிசி தேவையில் இலங்கை தன்னிறைவு பெற்றுள்ளது. இதனால், இந்த ஆண்டில் அரிசி இறக்குமதி செய்ய எதிர் பார்க்கவில்லை - என்று விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

2024 ஆம் ஆண்டில் இலங்கை தன்னிறைவை யும் வகையில், நெல், சோளம், உருளைக்கிழங்கு மற்றும் மிளகாய் பயிர்களுக்கு முன்னுரிமை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

நேற்று ஜனாதிபதி ஊடக மையத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும், 11

## சாந்தனை இலங்கைக்கு அனுப்புங்கள்!
### தமிழக முதல்வருக்கு சிறீதரன் கடிதம்

*கிளிநொச்சி, ஜன. 30*

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு, 32 வருட சிறைத் தண்டனையின் பின் கடந்த 2022.11.11 அன்று இந்திய உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட சாந்தன், முருகன், ரொபேர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகிய நால்வரையும் இலங்கைக்கு அனுப் பிவைக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி, தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலினுக்கு, பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

இதுதொடர்பில் சாந்தனின் தாயாரால் தனக்கு சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைக் கடிதத்தை மேற்கோள் காட்டி அவரால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு,

32 ஆண்டுகால சிறைத் தண்டனையின் பின்னர் உச்ச நீதிமன்றத் 11

## கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்ட மீனவர் மீட்பு
### சீசெல்ஸ் கரையோர பாதுகாப்பு படை இலங்கைக்கு அறிவிப்பு

*கொழும்பு, ஜன. 30*

அரபிக் கடலில் காணாமல் போன 'லொரன்சோ புத்தா -4' படகு சீசெல்ஸ் கடலோர பாதுகாப்பு படையினரால் மீட்கப்பட்டதாக இலங்கை அரசுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை சீசெல்ஸ் கரையோரப் பாதுகாப்பு படையினர் பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவுக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்தனர்.

ஆழ்கடல் மீன்பிடிப் படகான 'லொரன்சோ புத்தா- 4' கடந்த ஜனவரி 12 ஆம் திகதி 6 மீனவர்களுடன் திக்கோவிட்ட மீன்பிடி துறைமுகத்திலிருந்து தனது முதல் பயணத்தை ஆரம்பித்தது. 11

## மின் கட்டணம் செலுத்த புதிய முறைகள் அறிமுகம்

*கொழும்பு, ஜன. 30*

மின் கட்டணத்தை செலுத்துவதற்கு நுகர்வோருக்கு சில புதிய முறைகளை அறிமுகப்படுத்துவதற்கு இலங்கை மின்சார சபை நடவடிக்கை எடுத்து வருவதாக அந்தச் சபை அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அதன்படி, இலங்கை தபால் திணைக்களம் உத்தியோகபூர்வ இணையத்தளம் ஊடாகவும் வங்கி இயந்திரங்கள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் ஊடாகவும் இலங்கை மின்சார சபை செயலி, இணைய வங்கி சேவைகளை இலங்கை மின்சார சபை அறிமுகப்படுத்தியுள்ளது.

இது தொடர்பில் எழும் பிரச்னைகள் தொடர்பில் 1987 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பதன் மூலம் நுகர்வோர் முறைப்பாடுகளை தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுவதாக மின்சார சபை மேலும் தெரிவித்துள்ளது. (அ)

## பொதுச் செயலர் பதவி தொடர்பாக இழுப்பறி!
### சிறீ லங்கா சுதந்திர கட்சி தலைமையிலான புதிய கூட்டணியை அறிவிப்பதில் தாமதம்

*கொழும்பு, ஜன. 30*

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொது செயலாளர் பதவி தொடர்பான இழுப்பறி நிலை காரணமாகவே சுதந்திரக் கட்சியின் தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள புதிய அரசியல் கூட்டணியை அறிவிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் பதவி தொடர்பில் அமைச்சர் மகிந்த அமரவீர மற்றும் முன்னாள் பிரதி அமைச்சர் திலங்க சுமதிபால இடையில் மோதல் நிலவி வருகிறது. இது சம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்கொன்றும் நிலுவையில் உள்ளது.

இந்த நிலைமை காரணமாக இரண்டு பேரும் 11

## சுதந்திர தினம் கறுப்பு நாள் வடக்கு, கிழக்கில் பிரகடனம்
### யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் அழைப்பு

*யாழ்ப்பாணம், ஜன. 30*

நாட்டின் 76ஆவது சுதந்திர தினமான எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமையை வடக்கு, கிழக்கு முழுவதும் கறுப்பு நாளாக பிரகடனப்படுத்தியுள்ளன. அத்துடன், அன்றைய தினம் கவனவீர்ப்பு போராட்டங்களில் ஈடுபடவும் அழைப்பு விடுத்துள்ளன யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், வடக்கு, 11

## "ஜனாதிபதியின் இறுதி விருப்பம் இது"

*கொழும்பு, ஜன. 30*

இறுதியாக ஒருமுறை கொள்கை பிரகடன உரையை நிகழ்த்தவும் நீக்கமுடியாதுள்ள கோப் குழுத் தலைவரின் பதவியை பறிப்பதற்குமே ஜனாதிபதி பாராளுமன்ற கூட்டத் தொடரை ஒத்திவைத்துள்ளதாக எதிர்க்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

எதிர்க்கட்சி உறுப்பினரான எஸ்.எம்.மரிக்கார் நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் உரையாற்றுகையில்,

"ஆளும் அரசாங்கம் பாராளுமன்ற கூட்டத் தொடரை இதுவரை நான்கு முறை ஒத்திவைத்துள்ளது. எத்தகைய முறைகேடுகள் இடம்பெற்றாலும் கோப் குழுவின் தலைவரை நீக்குவதற்கான நடவடிக்கையை எடுக்க அரசுக்கு முதுகெலும்பு இல்லை.

பாராளுமன்றத்தின் கூட்டத் தொடர் அதற்காகவே ஒத்திவைக்கப்பட்டுள்ளது. மக்கள் ஆணையில் மீண்டும் 11

# மாடி வீட்டில் கஞ்சா செய்கை அமெரிக்க நாட்டவர் சிக்கினார்



கொழும்பு, ஜன. 30

பெலியத்தை பிரதேசத்தில் மாடி வீடொன்றில் கஞ்சா பயிர் செய்கையில் ஈடுபட்ட வெளி நாட்டவர் ஒருவர் பொலிஸா ரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் பெலியத்தை, சிட்டினாமலுவ பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்றுள்ளது.

சிட்டினாமலுவ பங்களாவத் தையில் உள்ள மூன்று மாடி வீடொன்றின் மேல் தளத்தில் சட்டவிரோதமாக குஷ் வகை கஞ்சாப் பயிர்ச் செய்கையை மேற்கொண்டிருந்த அமெரிக்கர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த வெளிநாட்டுப் பிரஜை, தான் வாடகை அடிப்படையில் எடுத்த வீட்டில் இந்த தோட் டத்தை கவனமாக பராமரித்து வந்துள்ளார். சந்தேக நபர் தனது மனைவியுடன் அந்த வீட்டில் வசித்து வந்துள்ளார்.

மேல் தளத்தின் ஒரு பகுதியை சுற்றி பொலித்தீனால் மறைத்து பூந்தொட்டிகளில் கஞ்சா செடி களை வளர்த்து பராமரித்துள் ளார்.

இராணுவத்தினரின் புலனாய் வுத் தகவலுக்கு அமைய பெலி யத்தை பொலிஸார் சந்தேகத் துக்கு உரிய வெளிநாட்டு பிர ஜையை கைது செய்துள்ளனர். (அ)

# படை சிப்பாய் சடலமாக மீட்பு


கொழும்பு, ஜன. 30

குளத்திலிருந்து இராணுவ சிப்பாயின் சடலம் நேற்று திங்கட்கிழமை பொலிஸா ரால் மீட்கப்பட்டுள்ளது.

களுத்துறை - ஹொரணை - அத்திலிவெவ பிரதேசத்தை சேர்ந்த இராணுவ சிப்பாய் ஒருவரே சடலமாக மீட்கப் பட்டார்.

உயிரிழந்த இராணுவ சிப்பாய் கடந்த ஞாயிற்றுக்கி ழமை உடற் பயிற்சியில் பங் கேற்கவில்லை என்று தேடப் பட்டபோதே அவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது என்று பொலிஸார் கூறினர். (அ)

# வனஜீவராசிகள் அதிகாரிகளை தாக்கிய இரண்டு பேர் சிக்கினர்!



கொழும்பு, ஜன. 30

அநுராதபுரம் - மொறகொட பகுதியில் வீடொன்றை சோத னையிடுவதற்காக சென்ற வன ஜீவராசிகள் அதிகாரிகளை தாக்கிய குற்றச்சாட்டில் இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள் ளனர்.

குறித்த வீட்டில் சட்டவிரோ தமான முறையில் மான் இறைச்சி சேகரித்து வைக்கப்பட்டுள்ளதாக கிடைக்கப்பெற்ற தகவலை யடுத்து சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது வனஜீவராசிகள் அதிகாரிகளின் கடமைகளுக்கு இடையூறு விளைவிக்கப்பட் டதுடன், அவர்கள் வீட்டு உரி மையாளர்களால் தாக்கப்பட் டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடு அளிக்கப்பட்டதை தொடர்ந்து அவர்கள் கைது செய்யப்பட்டுள் ளனர்.

இதனையடுத்து, மேற்கொள் ளப்பட்ட சோதனை நடவடிக் கையை தொடர்ந்து மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு தொகை மான் இறைச்சியும் மீட்கப்பட் டுள்ளது.

அத்துடன், தாக்குதலில் காயமடைந்த வனஜீவராசிகள் அதிகாரி யக்கல வைத்தியசாலை யில் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மகனின் வேட்டையில் தந்தை பரிதாபப் பலி!

கொழும்பு, ஜன. 30

கேகாலை தெடிகம பிரதேசத்தில் மகனொருவர் வன விலங்கை வேட்டையாடும் நோக்கில் பிரயோகித்த துப்பாக்கிச் சூட்டில் தந்தை உயிரிழந்தார்.

47 வயதுடைய தந்தை ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார்.

சம்பவத்தின்போது குறித்த பிரதேசத்தில் உள்ள மலைப்பகுதிக்கு தந்தையும் மகனும் வன விலங்குகளை வேட்டையாட சென்றுள் ளனர்.

இந்நிலையில் மகன் வன விலங்கு ஒன்றை குறிவைத்து துப்பாக் கியால் சுட்டபோது தந்தை உயிரிழந்தாரென பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் 17 வயது மகன் பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தெடிகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# 11 நாட்களேயான சிசு மரணம்; தலைமறைவாகினர் பெற்றோர்

கொழும்பு, ஜன. 30

குருநாகல் போதனா வைத் தியசாலையில் பிரசவித்து 11 நாட்களே ஆன சிசுவொன்று உயிரிழந்த சம்பவம் தொடர் பில் குறித்த சிசுவின் பெற் றோரை கண்டுபிடித்து கைது செய்யுமாறு உத்தரவிடப்பட் டுள்ளது.

இந்த உத்தரவை குருநாகல் பதில் நீதிவான் ஜயபிரேமா பி. தென்னக்கோன் குருநாகல் தலைமையக பொலிஸாருக்கு பிறப்பித்துள்ளார்.

குருநாகல் வைத்தியசாலை யில் புதிதாகப் பிறந்த ஆண் குழந்தை தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் பிறந்து 11 நாட்கள் ஆன நிலையில் உயிரிழந்தது.

குருநாகல் போதனா வைத் தியசாலையில் குழந்தையின் பிரேதப் பரிசோதனையை மேற்கொண்டதன் பின்னர் பதில் நீதிவான் பொலிஸா ருக்கு உரிய உத்தரவை வழங்கியுள்ளார்.

குறைப் பிரசவத்தில் குழந்தையைப் பெற்றெடுத்த தாய், குழந்தையை தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்த்து விட்டு யாரிடமும் சொல்லா மல் சில நாட்களுக்கு முன் வைத்தியசாலையை விட்டு வெளியேறியுள்ளார்.

இதனிடையே தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த குழந்தை உயிரிழந்தது.

இதன்படி, உயிரிழந்த சிசுவின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக பெற்றோரை கண்டுபிடித்து அவர்கள் தொடர்பான மரபணு பரிசோதனையை மேற்கொள்ளுமாறு பதில் நீதிவான் தென்னக்கோன் பொலிஸாருக்கு உத்தரவிட் டார்.

குழந்தையின் பெற்றோர் நாட்டை விட்டு தப்பிச் செல்லக்கூடும் என்ற தகவலை யும் கவனத்தில் கொண்ட பதில் நீதிவான்,அவர்கள் நாட்டை விட்டு தப்பிச் செல்ல முடியாதவாறு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத் துக்கு அறிவிக்குமாறும் உத்தரவிட்டார்.

பொல்கஹவெல கொட வெல பிரதேசத்தில் வசிக்கும் இளம் தம்பதியரே இந்த குழந்தையின் பெற்றோர் என சந்தேகிக்கப்படுவதாகவும், தம்மி அபேசிங்க என்ற யுவதியே குழந்தையை பெற்றெடுத்தாரெனவும் பொலிஸார் குறிப்பிட்டுள் ளனர். (அ)

# கடந்த ஆண்டு 1,502 சிறுமிகள் வன்புணர்வு!

கொழும்பு, ஜன. 30

இலங்கையில் கடந்த 2023ஆம் ஆண்டு 18 வயதுக் குட்பட்ட ஆயிரத்து 502 சிறுமிகள் வன்புணர்வுக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் திணைக் களம் தெரிவித்துள்ளது.

பொலிஸ் மகளிர் மற்றும் சிறுவர் பணியகத்தின் பணிப் பாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரேணுகா ஜயசுந்தர நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து வெளி யிட்ட அவர், இவ்வாறு வன் புணர்வுக்கு உள்ளான சிறுமி களில் 167 பேர் கர்ப்பமடைந் துள்ளனர். ஆனாலும் பல சம் பவங்களில் பாதிக்கப்பட்ட சிறுமிகளின் பெற்றோர் அல் லது குடும்பத்தினர் சம்பவம் தொடர்பில் பொலிஸ் முறைப் பாடு செய்வதில் அலட்சிய மாக செயல்பட்டுள்ளனர்.

துஷ்பிரயோகத்திற்கு உள் ளான சிறுமிகள் மற்றும் பெண்கள், அது தொடர்பான முறைப்பாடுகளை வழங்க 109 என்ற தொலைபேசி எண்ணை பொலிஸ் திணைக்களம் அறிமுகப்படுத்தியுள்ளது. (அ)

## செங்கடல் நெருக்கடி:

# கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிடும் கப்பல்களின் எண்ணிக்கை அதிகரிப்பு




கொழும்பு, ஜன. 30

செங்கடலில் ஏற்பட்டுள்ள நெருக்கடி காரணமாக கொழும்பு துறைமுகத்தை வந்தடையும் கப்பல்களின் எண்ணிக்கை அதிகரித்துள் ளது.

இதற்கமைய, துறைமுகத் தின் கொள்ளளவு திறன் அதிகரிக்கப்பட்டுள்ளதாக துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமானப் போக்கு வரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித் துள்ளார்.

கொழும்பு துறைமுகத்தின் ஜெயபாலு முனையத்திற்கு விசேட களப் பயணம் மேற் கொண்டபோதே அமைச் சர் இந்த விடயத்தை கூறினார்.

நிலவும் போர்ச் சூழலால் சுயேஸ் கால்வாய் ஊடாகப் பயணிக்கும் வர்த்தக கப்பல் களுக்கு பயங்கரவாத அச்சு றுத்தல் காணப்படுகிறது.

மத்திய கிழக்கு, தெற்கா சியா மற்றும் கிழக்கு ஆசிய பிராந்தியங்களுக்கான கப்பல் பாதையில் முக்கிய துறைமுகமாக கொழும்பு அமைந்துள்ளது.

இந்த நிலையில், கப்பல் களை பாதுகாக்கும் வகையில் கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிடுவதற்கு கப்பல் நிறுவனங்கள் நடவடிக்கை எடுத்துள்ளன.

இதன் காரணமாக கொழும்பு துறைமுகத்தில் நேற்று முன்தினம் மாத்திரம் 24 கப்பல்கள் நங்கூரமிட வசதி கள் செய்யப்பட்டுள்ளன.

மேலும், துறைமுகத்துக்கு வெளியே சுமார் 10 கப்பல்கள் நங்கூரமிட்டு காத்திருக்கின் றன என்றும் அமைச்சர் கூறி னார். (அ)

# வரிகளை உயர்த்த எதிர்பார்க்கவில்லை

கொழும்பு, ஜன. 30

அரசின் வருமானத்தை அதிகரிக்க எதிர்பார்த்துள்ள போதிலும் மறைமுக வரிகளை அறிமுகப்படுத்தவோ அல்லது வரிகளை அதிகரிக்கவோ எந்த வகையிலும் அரசாங்கம் எதிர் பார்க்கவில்லை எனவும் நிதி ராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித் துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்-

மறைமுக வரிகள் காரண மாக பொருட்களின் விலை கள் அதிகரிக்காது. பொருட் களின் கேள்விகள் மற்றும் விநியோகத்தின் அடிப்படை யிலேயே அவற்றின் விலைகள் தீர்மானிக்கப்படும்.

இதனிடையே எதிர்வரும் 2025 ஆம் ஆண்டில் புதிய சொத்து வரியை அறிமுகப் படுத்த அரசாங்கம் எதிர் பார்த்துள்ளது. இந்த சொத்து வரியானது நேரடியான வரி.

பெரிய சொத்துகள் இருக் கும் நபர்களிடம் இருந்து இந்த சொத்து வரி அறவிடப் படும் - என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu
30.01.2024 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம், தை 16

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## மாலைதீவிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டியது

மாலைதீவின் பாராளுமன்றத்துக்குள் கடும் மோதல் நிலைமை உருவாகியிருக்கின்றது. இது ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்ட விடயம்தான். - ஏனெனில், மாலைதீவின் புதிய ஜனாதிபதி பிராந்திய அரசியல் மரபுக்கு எதிரான நகர்வுகளை மேற்கொண்டிருந்தார் - பிராந்திய சக்தியான இந்தியாவை முற்றிலுமாக புறம்தள்ளி, சீனாவுக்கான பயணத்தை மேற்கொண்டிருந்தார். அவர் சீனாவுக்கு செல்வது ஒரு விடயமல்ல. ஆனால், இந்தியாவுக்கு சவால் விடும் வகையில் அதனை முன்னெடுத்ததே பிரச்னைக்குரியது. அத்துடன், இந்திய இராணுவத்தை வெளியேறுவதற்கு காலக்கெடு விதித்தமை மிகப் பெரிய தவறாகும். இவ்வாறான தவறுகளை எதிரணியினர் தொடர்ந்தும் கண்டித்து வந்தனர். இது மாலைதீவின் எதிர்காலத்தை பெரியளவில் பாதிக்கும் என்பதே அவர்களின் வாதமாக இருந்தது. இவ்வாறானதொரு பின்னணியில்தான் தற்போது மாலைதீவின் பாராளுமன்றம் மோதல் களமாக மாறியிருக்கின்றது.

மாலைதீவின் பிரச்னைகளின் வேரை அடையாளம் கண்டுகொள்வது இலகுவானது. அனைத்துப் பிரச்னைகளுக்குமான காரணம் சீனாவின் அதிக தலையீடுகளாகும். சீனா அதன் மேலாதிக்க அதிகார ஆசையைப் பூர்த்தி செய்வதற்காக இந்தியாவின் அயல் நாடுகளுக்குள் நுழைந்து அங்கு தனது செல்வாக்கை அதிகரிக்க முற்படுகின்றது.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் 2010களுக்கு பின்னர் மாலைதீவின் அரசியல் தொடர்ந்தும் குழப்பங்களின் களமாக மாறியிருக்கின்றது. 2013இல் ஆட்சிக்கு வந்த அப்துல்லா யமீன் அரசாங்கம் சீன சார்புக்குள் விழுந்தது. இதனால் மாலைதீவு அதுவரையில் கடைப்பிடித்துவந்த வெளிவிவகாரக் கொள்கையில் சறுக்கல்கள் ஏற்பட்டன.

2018இல், இப்ராகிம் சோலி ஜனாதிபதியாக வந்தமையைத் தொடர்ந்து, நிலைமைகள் மீண்டும் சுமுகநிலைக்கு வந்தன. இந்தக் காலத்தில் மாலைதீவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகள் வலுவடைந்தன. ஆனால், தற்போது மீண்டும் நிலைமைகள் மோசமடைந்திருக்கின்றன. மூசி ஜனாதிபதியாக தெரிவானமையைத் தொடர்ந்து இந்திய - மாலைதீவு உறவுகள் சிக்கலடைந்திருக்கின்றன.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் இந்திய இராணுவத்தை எதிர்வரும் மார்ச் மாதத்துக்கு முன்பதாக அகற்ற வேண்டும் என்று மூசி காலக்கெடு விதித்திருக்கின்றார். இதன் மூலம் மாலைதீவின் இறைமை பாதிக்கப்படுவதான கதையொன்று கூறப்படுகின்றது. உண்மையில், மாலைதீவில் வெறுமனே 75 இந்திய படையினர்தான் இருக்கின்றனர். 75 இராணுவத்தினர் நிலைகொண்டிருப்பது ஒரு நாட்டின் இறைமையை எந்த வகையில் பாதிக்கும்? அமெரிக்கா உலகெங்கும் 70 நாடுகளுக்கு மேல் அதன் இராணுவத்தை நிலைநிறுத்தியிருக்கின்றது. அந்த நாடுகள் எவையுமே அமெரிக்க இராணுவத்தை இறைமைப் பிரச்னையாக நோக்கவில்லை - பின்னர் எதற்காக மாலைதீவின் ஜனாதிபதி இதனை ஓர் இறைமை பிரச்னையாக நோக்குகின்றார்? - பதில் சீனா!

சீனாவுக்கு அதிக இடத்தை வழங்கியதன் விளைவுகளையே தற்போது மாலைதீவு எதிர்கொண்டிருக்கின்றது. இந்த நிலைமையால் மாலைதீவு அதன் அரசியல் ஸ்திரத்தன்மையை இழந்திருக்கின்றது. இதனால் மாலைதீவின் எதிர்காலமே பாதிக்கப்படும். மாலைதீவின் குழப்ப நிலை இலங்கைக்கும் சிறந்த உதாரணம். அளவுக்கதிகமாக சீனாவின் செல்வாக்கு அதிகரிக்கும் போது சிறிய நாடுகள் பெரியளவில் பாதிப்பை எதிர்கொள்ளும்.

மகிந்த ராஜபக்ஷவின் சீன சார்பு இலங்கையை எந்த நிலைக்குக் கொண்டு வந்திருக்கின்றது என்பது ஏற்கனவே கண்கூடு. தற்போது மாலைதீவின் நிலைமையானது இலங்கையின் ஆட்சியாளர்கள் மட்டுமல்ல தமிழர்களும் இதனை ஒரு படிப்பினையாக எடுத்துக் கொள்ள வேண்டும். இந்தியாவுக்கு அருகிலுள்ளவர்கள் இந்திய விரோதப் போக்கில் இந்திய எதிர்ப்பு சக்திகளோடு இணைந்துகொள்ள முற்படும்போது அவர்களின் அரசியல் எதிர்காலம் பெரும் நெருக்கடிகளை சந்திக்கும் என்பது நிச்சயம். இந்தியா ஒரு பிராந்திய சக்தி - எவர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அதன் தேசிய பாதுகாப்பு மற்றும் நீண்டகால நலன்களை கருத்தில்கொண்டு தலையீடு செய்ய வேண்டிய நிர்ப்பந்தங்களை இந்தியாவால் ஒருபோதுமே தவிர்க்க முடியாது.

# பெரும்பான்மை வாக்குகள் மூலம் நல்லிணக்கத்தை சாதிக்கமுடியாது

ஸ்ரீ லංකා ජාතික සාම මණ්ඩලය
இலங்கை தேசிய சமாதானப் பேரவை
National Peace Council of Sri Lanka

இணையவெளி பாதுகாப்பு சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் அவசரமாக நிறைவேற்றுவதில் அரசாங்கம் நடந்துகொண்ட முறை மிகவும் கவலைக்குரிய ஒரு விடயமாகும். மூன்றாவது வாசிப்பின்போது சட்டமூலம் மீது வாக்கெடுப்பை நடத்த வேண்டும் எதிர்க்கட்சி கேட்டுக்கொண்டபோதிலும், வாக்கெடுப்புக்கு விடாமலே அது நிறைவேற்றப்பட்டது. மேலும், முதலில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட சட்டமூலத்துக்கு உயர்நீதிமன்றம் விதப்புரை செய்த திருத்தங்களில் பெருமளவானவை சேர்க்கப்படவில்லை என்று எதிர்க்கட்சி குற்றஞ்சாட்டியிருக்கிறது.

இத்தகைய குறைபாடுகள் காரணமாக பாராளுமன்ற சபாநாயகர் சட்டமூலத்தைச் சான்றுப்படுத்தி கைச்சாத்திட்டு சட்டமாக்கிவிடக்கூடாது என்று எதிர்க்கட்சி விடுத்திருக்கும் கோரிக்கைக்கு அரசாங்கம் செவிமடுக்கவேண்டும் என்று தேசிய சமாதானப் பேரவை கேட்டுக்கொள்கிறது. பாராளுமன்ற கூட்டத்தொடரை ஜனாதிபதி ஒத்திவைத்திருப்பது சகல திருத்தங்களும் சட்டத்தில் சேர்க்கப்படுவதை உறுதிசெய்வதற்கு சந்தர்ப்பத்தைக் கொடுக்கிறது.

உயர்நீதிமன்றத்தின் உத்தரவின் பிரகாரம் சட்டவாக்கச் செயன்முறையின்போது சகல திருத்தங்களும் உகந்த முறையில் சேர்க்கப்பட்டிருக்கின்றனவா என்பதை சட்டமா அதிபர் திணைக்களம் ஆராயும் என்று சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன அறிவித்திருப்பதை நாம் வரவேற்கிறோம். கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்துக்கான உரிமை ஒரு அடிப்படை உரிமையாகும். அது மீறப்பட்டால் ஜனநாயக செயன்முறை ஆபத்துக்குள்ளாகும்.

இத்தகைய பின்னணியில், இவ்வருடம் ஜனவரி முதலாம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்ட உண்மை, ஐக்கியம் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சட்டமூலம் தொடர்பில் கவனத்துக்கு கொண்டுவர தேசிய சமாதானப் பேரவை விரும்புகிறது. கடந்த வாரம் இணையவெளி பாதுகாப்பு சட்டமூலத்தையும் ஜனவரி 9 தேசிய ஐங்கியம் மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலக சட்டமூலத்தையும் பாராளுமன்றத்தில் அவசரமாக நிறைவேற்றியதைப் போன்று எதிர்க்கட்சியினதோ அல்லது சிவில் சமூகத்தினதோ கருத்துகளுக்கு செவிசாய்க்காமல் இந்த சட்டமூலத்தின் விடயத்திலும் அரசாங்கம் நடந்துகொள்ளககூடாது என்று நாம் கேட்டுக்கொள்கிறோம்.

முன்னைய ஆணைக்குழுக்கள் மற்றும் கமிட்டிகளின் அறிக்கைளையும் அவதானிப்புகளையும் ஆராய்வதற்கு நீதியரசர் ஏ.எச்.எம்.டி. நவாஸ் தலைமையில் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு அதன் அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு முன்னதாக உண்மை, ஐக்கியம் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பிலான சட்டமூலம் தயாரிக்கப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருப்பது மிகவும் கவலைக்கு உரியதாகும்.

கடந்த வருடம் பெப்ரவரியில் நவாஸ் ஆணைக்குழுவினால் கையளிக்கப்பட்ட இடைக்கால சுருக்க அறிக்கையில் இலங்கையில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவொன்று பற்றி குறிப்பிடப்பட்டதுடன் அதன் உருவரை குறித்து இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்படும்போது விளக்கமாகக் கூறப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.


நவாஸ் ஆணைக்குழு அதன் இறுதி அறிக்கையைச் சமர்ப்பிக்கும் வரை காத்திராமலும் எதிரணி அரசியல் கட்சிகளுடனும் சிவில் சமூகத்துடனும் குறைந்தளவு கலந்துரையாடலுடனும் உண்மை,ஐக்கியம் மற்றும் நல்லிண்க்க ஆணைக்குழு சட்டமூலத்தை நிறைவேற்றுவதில் அரசாங்கம் காட்டுகின்ற அவசரம் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு அப்பால் வேறு ஏதாவது நோக்கம் இருக்கிறதோ என்ற சந்தேகத்தைக் கிளப்புகிறது.

பாதிக்கப்பட்ட இன, மத சிறுபான்மைச் சமூகங்களின் ஆதரவு இல்லாவிட்டாலும் கூட இந்த ஆணைக்குழு சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றுவதன் மூலம் சர்வதேச சமூகத்தின் ஆதரவைப் பெறும் ஆரவம் அரசாங்கத்துக்கு இருக்கிறது போன்று தெரிகிறது.

தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகம் போன்று உத்தேச உண்மை ஆணைக்குழுவின் நோக்கமும் தேசிய நல்லணக்கச் செயன்முறையை வலுப்படுத்துவதேயாகும். அதனால் பாராளுமன்றத்தில் அரசாங்கம் தனக்கு இருக்கின்ற பெரும்பான்மைப் பலத்தை பயன்படுத்தி அவசரமாக சட்டமூலத்தை நிறைவேற்றுவதை விடுத்து எதிரணியையும் இன,மத சிறுபான்மை சமூகங்களையும் பிரதிநிதித்துப்படுத்துகின்ற கட்சிகளுடன் கருத்தொருமிப்பைக் கண்டு அதன் அடிப்படையில் செயல்படவேண்டியது அவசியமாகும்.

உத்தேச உண்மை, ஐக்கியம் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விட்டு நிறைவேற்றுவதற்கு முன்னதாக அரசாங்கம் எதிரணிகளுடனும் சிவில் சமூகத்துடனும் கலந்துரையாடி அவற்றின் கருத்தொருமிப்பைப் பெறவேண்டும் என்று தேசிய சமாதானப் பேரவை அழைப்பு விடுக்கிறது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**ஜனவரி - 30 செவ்வாய்க்கிழமை**
சோபகிருது வருடம் - தை 16
நல்ல நேரம் : 11.06 - 12.36
ராகு காலம் : 03.36 - 05.06
திதி : சதுர்த்தி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். அக்கம் - பக்கம் வீட்டாரின் அன்புத் தொல்லை குறையும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதர வால் நினைத்ததை முடிப்பீர்கள்.

**இடபம்**
பால்ய நண்பர்கள் உதவுவார்கள். வெளிவட்டாரத் தொடர்புகள் அதிகரிக்கும். புது வேலை கிடைக்கும். மகளுக்கு நல்ல வரன் அமையும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள்.

**மிதுனம்**
குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். அரசாங்கத்தாலும் அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும்.

**கடகம்**
கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் அதிகரிக்கும். வர வேண்டிய பணம் கைக்கு வரும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். பழைய பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் வெளுத்ததெல்லாம் பாலாக நினைத்து சிலரிடம் சிக்கிக் கொள்ளாதீர்கள். கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும்.

**கன்னி**
திட்டமிட்ட காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டிவரும். திடீர் பயணங்கள் செலவுகளால் திணறுவீர்கள். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டிலாபம் பெறுவீர்கள்.

**துலாம்**
எதிலும் வெற்றி பெறுவீர்கள். பெற்றோரின் ஆதரவு கிட்டும். நாடிவந்தவர்களுக்கு உதவி செய்வீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். தேவைகள் பூர்தியாகும் நாள்.

**விருட்சிகம்**
சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். உறவினர்கள் நண்பர்கள் உங்களை கலந்தா லோசித்து முடிவுகள் எடுப்பார்கள். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள்.

**தனுசு**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். அரைகுறையாக நின்ற வேலைகளை முடியும். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். சுப நிகழ்ச்சியில் கலந்து கொள்வீர்கள்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால்சில வேலைகள் தடைபட்டு முடியும். சிலர் உங்கள் நிறை குறைகளை எடுத்துச் சொன்னால் கோபப்படாதீர்கள். கவனம் தேவைப்படும் நாள் .

**கும்பம்**
உங்கள் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். விலை உயர்ந்த ஆபரணம் வாங்குவீர்கள். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக்கொள்வீர்கள்.

**மீனம்**
எதிர்பாராத பணவரவு கிடைக்கும். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் திட்டுவீர்கள். தொட்டது துலங்கும் நாள்.

# சாந்தனுக்கு அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்படுகின்றது



சென்னை, ஜன. 30
கல்லீரல் செயலிழப்பால் பாதிக்கப்பட்டுள்ள சாந்தனுக்கு சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்று வேலூர் மத்திய சிறையில் அடைக்கப் பட்டிருந்த சாந்தன், கடந்த 2022ஆம் ஆண்டு உச்ச நீதிமன்ற அறிவுறுத்தலின்பேரில் விடுவிக்கப்பட்டார். இலங்கைத் தமிழரான சாந்தன், திருச்சியில் உள்ள சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்தார். கடந்த 24ஆம் திகதி அவருக்கு உடல்நிலை பாதிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து திருச்சி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இதையடுத்து, அவர் உயர் சிகிச்சைக்காக சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். அவருக்கு மருத்துவர்கள் குழு சிகிச்சை அளித்து வருகின்றனர்.

இதுகுறித்து மருத்துவர்களிடம் கேட்டபோது, "சாந்தனுக்கு கல்லீரல் செயலிழப்பு (சிரோஸிஸ்) மற்றும் பிற உடல் நல பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. தொடர்ந்து தீவிரசிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது" என்றனர்.

முன்னதாக சாந்தனுக்கு கல்லீரல் சிறுநீரக பாதிப்பு ஏற்பட்டுள்ளது. உயிருக்கு ஆபத்தான நிலையிலுள்ள அவருக்கு உயர் சிகிச்சை வழங்கப்பட வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் மு. க. ஸ்டாலினுக்கு சிறை கைதிகள் உரிமைகள் மையம் என்ற அமைப்பு கடிதம் மூலம் வலியுறுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பாராளுமன்ற தேர்தல்:
# தி. மு. க. - காங்கிரஸ் தொகுதி பங்கீடு பேச்சில் உடன்பாடு எட்டப்படவில்லை

சென்னை, ஜன. 30
மக்களவை தேர்தல் தொகுதி பங்கீடு தொடர்பாக தி. மு. க.- காங்கிரஸ் இடையே முதல் கட்ட பேச்சு நேற்றுமுன்தினம் நடந்தது. இதில் முடிவு எட்டப்படாததால் பெப். 9ஆம் திகதிக்கு பிறகு 2ஆம் கட்ட பேச்சு நடக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அகில இந்திய காங்கிரஸ் நியமித்துள்ள கூட்டணி பேச்சு குழு அமைப்பாளர் முகுல் வாஸ்னிக், முன்னாள் மத்திய அமைச்சர் சல்மான் குர்ஷித், தமிழக பொறுப்பாளர் அஜோய் குமார் ஆகியோர் சென்னையில் உள்ள காங்கிரஸ் தலைமை அலுவலகமான சத்தியமூர்த்தி பவனுக்கு வந்தனர்.

அங்கு காங்கிரஸ் மூத்த தலைவர்கள், மாநில தேர்தல் குழுவினருடன் தனித்தனியே பேசி, கருத்துகளை கேட்டறிந்தனர். அப்போது, காங்கிரஸ் குறைந்தபட்சம் 3 தனித் தொகுதிகளில் போட்டியிட வேண்டும். தி. மு. க. விடம் அதிக தொகுதிகள் கேட்க வேண்டும் என்று பல நிர்வாகிகள் வலியுறுத்தினர்.

பின்னர், காங்கிரஸின் முக்கியஸ்தர்கள் தி. மு. க. தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயம் சென்றனர்.

தி. மு. க. தொகுதி பங்கீட்டு குழுதலைவர் டி..ஆர்.பாலு தலைமையிலான குழுவினருடன் அவர்கள் பேச்சு நடத்தினர்.

அப்போது, காங்கிரஸ் 15 தொகுதிகள் கேட்டதாகவும், புதுச்சேரி உட்பட7 தொகுதிகள் மட்டுமே வழங்கப்படும் என்று தி. மு. க. தரப்பில் தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது. இதனால், எந்த முடிவும் எட்டப்படவில்லை. இதையடுத்து, இரு தரப்பினரும், தங்கள் தலைவர்களுடன் கலந்து பேசி, அதன் விவரங்களை அடுத்த கூட்டத்தில் தெரிவிப்பது என்று முடிவு செய்திருப்பதாக தெரிகிறது.

இந்த பேச்சு குறித்து கே.எஸ்.அழகிரி கூறுகையில், அகில இந்திய காங்கிரஸ் தலைவர்கள் தி. மு. க. நிர்வாகிகளுடன் தேர்தல் தொடர்பாக கலந்துரையாடினர். முகுல் வாஸ்னிக் தலைமையில் பேச்சு நடைபெற்றது. பேச்சு மிகவும் திருப்திகரமாக இருந்தது. மேற்கொண்டு பேச வேண்டிய விசயங்களை வெகு விரைவில் பேசுவோம் - என்றார்.

தி. மு. க. தொகுதி பங்கீட்டு பேச்சு குழு தலைவர் டி. ஆர். பாலு கூறியதாவது: தி. மு. க. - காங்கிரஸ் இடையே ஆரம்ப கட்ட பேச்சுதான் நடந்துள்ளது. மக்களவை கூட்டத் தொடர் வரும் 9ஆம் திகதி வரை நடைபெறுகிறது. அதன் பிறகு, காங்கிரஸ் நிர்வாகிகளுடன் 2ஆம் கட்ட பேச்சு நடைபெறும். தி. மு. க. கூட்டணியில் யார் வேண்டுமானாலும் இணையலாம். ஆனால், எங்களிடம் இடம்தான் இல்லை - என்றார். (ஐ)

# பாரதிய ஜனதா கட்சியுடன் ஒட்டோ உறவோ இல்லை

## அ. தி. மு. க. மீண்டும் தெரிவிப்பு

சென்னை, ஜன. 30
"தூக்கத்தில் இருந்து எழுப்பி கேட்டாலும் இனி பா. ஜ. கவு டன் ஒட்டும் இல்லை, உறவும் இல்லை" என அ. தி. மு. க. முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க தலைமை பணிமனையில் முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு,

வடக்கில் இந்தியா கூட்டணி, நெல்லிக்காய் மூட்டை போல சிதறிக்கொண்டு இருக்கிறது. அதே நிலைமை தமிழகத்திலும் வரும்.

தி. மு. க. கூட்டணியில் உள்ளவர்கள் எல்லாம் ஒரே கொள்கையில் ஊறியவர்கள் அல்ல் முரண்பாடுகள் உள்ளன. பா.ஜ. கவுடன் கூட்டணி இல்லை என பலமுறை கூறிவிட்டோம். தூக்கத்தில் இருந்து எழுப்பி கேட்டாலும் இனி பா.ஜ.கவுடன் ஒட்டும் இல்லை, உறவும் இல்லை. அந்த பெட்டியை கழற்றி விட்டோம் இனிமேலும் அந்த பெட்டியை எந்திரத்துடன் சேர்க்கும் எண்ணமில்லை.

அண்ணாமலை தன்னை முன்னிலைப்படுத்தவே பேசி வருகிறார். பா.ஜ. கவை முன்னிலைப்படுத்தவில்லை. நடக்காத விசயத்தை கூறி திசை திருப்ப அண்ணாமலை முயற்சிக்கிறார். அவரை போல "அண்ணே அண்ணே" என்று நாங்கள் கூழைக்கும்பிடு போடுபவர்கள் கிடையாது. கூழைக்கும்பிடு போட்டு, இங்குள்ள மக்களை ஏமாற்றி காலூன்ற நினைத்தால் அது வீணாகத்தான் முடியும் - என்றார்.

## அதானி காற்றாலை மின் திட்டத்துக்காக
# தனியாரின் நிலங்களை கையகப்படுத்தும் அரசு!

**கொழும்பு, ஜன. 30**
**அதானி குழுமத்தின் 250 மெகாவோட் மன்னார் காற்றாலை மின் திட்டத்திற்காக பெரும்பாலான நிலங்களை குறிப்பாக தனியாருக்குச் சொந்தமான நிலங்களைக் கையகப்படுத்தும் பணியை அரசாங்கம் ஆரம்பித்துள்ளதாக சுற்றுச்சூழல் மதிப்பீட்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

மன்னாரின் வளமான மற்றும் பன்முகத்தன்மை கொண்ட பறவையினங்களுக்கு இந்த திட்டத்தினால் பாதிப்பு ஏற்படுவதை தடுக்க, வலுவான நடவடிக்கைகளின் அவசியத்தை இந்த அறிக்கை வலியுறுத்தியுள்ளது.

ஏற்கனவே இலங்கை மின்சார சபையினால் நிர்வகிக்கப்படும் தமபாபவனி காற்றாலை மின் திட்டத்தினால், கணிக்கப்பட்டதை விட அதிக பறவை ஆபத்து மோதல்கள் ஏற்பட்டுள்ளதை கருத்திற்கொண்டே இந்த வலியுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அதானி கிரீன் எனர்ஜி சிறிலங்கா லிமிடெட் இந்த திட்டத்துக்கான முதலீடாக 420 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலவிடுகிறது.

மொத்தமாக அமைக்கப்படவுள்ள 52 காற்றாலைகள் ஒவ்வொன்றும் 5.2 மெகாவாட் திறன் கொண்டதாக இருக்கும்.

இந்த திட்டத்துக்காக வீதிகள் உட்பட தேவையான 201.98 ஹெக்டேயர் நிலப்பரப்பு, அரசாங்கத்தினால் கையகப்படுத்தப்பட்டு அதானி திட்டத்துக்கு நீண்டகாலமாக குத்தகைக்கு விடப்படும்.

அதன் சேற்றுப் பகுதிகள் இடம்பெயர்ந்த காலத்தில் கரையோரப் பறவைகளுக்கு உணவளிக்கின்றன.

மேலும் அவற்றில் அதிக எண்ணிக்கையிலான பறவைகள் நிலப்பரப்பை ஒரு தனித்துவமான வாழ்விடமாக மாற்றுகின்றன.

இது பூர்வீக நீர்வாழ் மற்றும் அரை நீர்வாழ் பறவைகளின் தாயகமாகவும் உள்ளது. சில இனங்கள் இந்த பகுதிகளை இனப்பெருக்கம் செய்யும் இடங்களாக பயன்படுத்துகின்றன.

முன்மொழியப்பட்ட காற்றாலை திட்டங்கள், அடம்ஸ் பாலம் தேசிய பூங்கா, விடத்தல் தீவு இயற்கை பாதுகாப்பு தளமான வங்காலை சரணாலயம் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

தலைமன்னார் மற்றும் அடம்ஸ் பாலம் ஆகியவை நீர்ப்பறவைகளுக்கான சரணாலயங்களாக அமைந்துள்ளன.

மன்னார், புலம்பெயரும் பறவைகளுக்கான ஒரு முக்கிய நுழைவு மற்றும் வெளியேறும் இடமாகும், ஆயிரக்கணக்கான பறவைகள் இந்த பாதை வழியாக மன்னார் தீவை அடைகின்றன.

அதன் பின்னரே அவர்கள் நாட்டின் உட்பகுதிகளுக்கு கலைந்து செல்கின்றன.

இலங்கையில் பதிவு செய்யப்பட்ட பறவைகளில் 30 வீதத்துக்கும் அதிகமானவை அதாவது 150 க்கும் மேற்பட்ட இனங்கள், இந்த பிராந்தியத்தில் உள்ளன.

மேலும் இடம்பெயர்ந்த காலத்தில் 200,000 இற்கும் மேற்பட்ட நீர் பறவைகளை அங்கு காணமுடியும்.

கடந்த சில ஆண்டுகளில் திட்டத் தளம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் படி, மொத்தம் 283 உயிரினங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதில் நான்கு உள்ளூர் இனங்கள் மற்றும் 81 உறுதிப்படுத்தப்பட்ட புலம்பெயர்ந்த இனங்கள் உள்ளன.

அவற்றுள் 27 இனங்கள் தேசிய அளவில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன.

மேலும் 13 ஆபத்தான உயிரினங்கள், 03 அழிந்து வரும் இனங்கள், 11 பாதிக்கப்படக்கூடிய இனங்கள் மற்றும் 15 அச்சுறுத்தலுக்கு உட்பட்ட இனங்களாக உள்ளன.

02 இனங்கள் குறிப்பாக பெரிய முடிச்சு மற்றும் கம்பளி - கழுத்து நாரை என்பன உலகளவில் அச்சுறுத்தப்பட்டவை என்று பட்டியலிடப்பட்டுள்ளன. (அ)

## இலங்கையில் அதிக பிள்ளைகள் பெற்ற 97 வயது மூதாட்டி மரணம்!



கொழும்பு, ஜன. 30
இலங்கையில் அதிக குழந்தைகளை பெற்ற தாய்க்கு வழங்கப்படும் வீர மாதா விருதை பல வருடங்களாக பெற்றுக்கொண்ட பெண், பதுளையில் நேற்று முன்தினம் காலமானார்.

திருமதி ரத்நாயக்கா சக்கண்ணமாலா என்று பெயரிடப்பட்ட அவரது பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் மற்றும் கொள்ளுப் பேரப்பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை 180 ஆகும்.

தேசிய முதியோர் உரிமைகள் அலுவலகம் வழங்கும் வீரத் தாய் விருதை வென்ற அவர், சமீபத்தில் தனது 97ஆவது பிறந்த நாளை தனது குழந்தைகளுடன் கொண்டாடினார்.

அவரது இறுதிக் கிரியைகள் பதுளை பொது மயானத்தில் நேற்று மாலை இடம்பெற்றது. (அ)

## குழந்தையை பிரசவித்த பெண் தங்காலையில் சடலமாக மீட்பு!

கொழும்பு, ஜன. 30
தங்காலை மீன்பிடி துறைமுகத்துக்கு அருகிலிருந்து பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் ரன்ன பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய பெண் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளில் குறித்த பெண் தங்காலை வைத்தியசாலையில் அண்மையில் குழந்தை ஒன்றை பிரசவித்துள்ள நிலையில் வைத்தியசாலை நிர்வாகத்துக்கு அறிவிக்காமல் அங்கிருந்து வெளியேறியுள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்தநிலையில், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தங்காலை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

## கொழும்புக்கான விமான சேவை நிறுத்தியுள்ளது ஓமான் எயார்!

கொழும்பு, ஜன. 30
ஓமான் எயர் விமான சேவை கொழும்புக்கான தனது விமான சேவையை நிறுத்தியுள்ளது.

பொருளாதார ரீதியில் தமது விமான சேவைகளை வலுப்படுத்தும் விதமாகவே குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை கோடை காலத்தை முன்னிட்டு விமானப் பயணங்களின் நேர அட்டவணையை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், நேரடி பயணிகளுக்கு அதிக வசதியை வழங்கத் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)




## பெருந்தோட்டத்துறை இராஜாங்க அமைச்சராக லொஹான் ரத்வத்த

கொழும்பு, ஜன. 30
பெருந்தோட்ட கைத்தொழில் மற்றும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராக லொஹான் ரத்வத்த ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் நேற்றுக் காலை சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

அநுராதபுரம் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதியின் தலையில் கைத்துப்பாக்கி வைத்து அச்சுறுத்திய சம்பவத்தில், அவர் நீதிமன்ற விசாரணையை எதிர்கொள்வது குறிப்பிடத்தக்கது. (அ)

## போக்குவரத்து விதிகள் மீறிய 675 வாகனங்கள் அடையாளம்!

கொழும்பு, ஜன. 30
கொழும்பு நகரினுள் போக்குவரத்து விதிகளை மீறிய 675 வாகனங்கள் சி.சி.ரி.வி. கண்காணிப்பு அமைப்பு மூலம் அடையாளம் காணப்பட்டுள்ளதாக காவல்துறை போக்குவரத்துப் பிரிவின் பொறுப்பதிகாரி பிரதி பொலிஸ்மா அதிபர் இந்திக ஹப்புகொட தெரிவித்தார்.

அதன்படி, குறித்த போக்குவரத்து விதி மீறல்களில் ஈடுபட்ட சாரதிகளை எச்சரிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், குறித்த சாரதிகளுக்கு அது தொடர்பில் அறிவுறுத்தல்கள் அடங்கிய அறிவித்தல் ஒன்றையும் அனுப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

எவ்வாறாயினும், எதிர்வரும் முதலாம் திகதி முதல் கொழும்பு நகரில் சி.சி.ரி.வி. மூலம், போக்குவரத்து விதிமீறல்களை மேற்கொண்டதாக அடையாளம் காணப்படும் வாகன சாரதிகளுக்கு அபராதம் விதிக்கப்படும் என வும் பிரதி பொலிஸ்மா அதிபர் இந்திக ஹப்பு கொட தெரிவித்தார்.

போக்குவரத்து விதிகளை மீறும் சாரதிகளை கண்காணிப்பதற்காக நடைமுறைப்படுத்தப்படும் புதிய சி.சி.ரி.வி கண்காணிப்பு முறை கடந்த 22ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

அந்த வேலைத்திட்டத்தின் கீழ் கொழும்புக்கு பிரவேசிக்கும் வாகனங்கள் 108 சி.ரி.டி.வி. கமராக்கள் மூலம் கண்காணிக்கப்படுகின்றன.

தூரப் பிரதேசங்களிலிருந்து கொழும்புக்கு வரும் சாரதியொருவர் போக்குவரத்து விதிகளை மீறினால், அவர் வசிக்கும் பகுதியில் உள்ள பொலிஸ் நிலையம் ஊடாக அபராதப் பத்திரத்தை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் போக்குவரத்துப் பிரிவின் பொறுப்பதிகாரி பிரதி பொலிஸ்மா அதிபர் இந்திக ஹப்புகொட குறிப்பிட்டார். (அ)

# அரசை விரட்டும் போராட்டத்தை இன்று கொழும்பில் ஆரம்பிக்கிறது சஜித் அணி!

கொழும்பு, ஜன. 30

**புதிய பயங்கரவாத தடைச்சட்டம் உட்பட அடக்குமுறை சட்டங்களைக் கொண்டுவந்து மக்களை அடக்கி ஆளும் இந்த ரணில்-ராஜபக்ஷ அரசை வீட்டுக்கு அனுப்ப மக்கள் அணிதிரள வேண்டும். இதற்கான அரசியல் சமர் ஜனவரி 30ஆம் திகதி (இன்று) கொழும்பில் ஆரம்பமாகும்."**

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருண தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ரணில் - ராஜபக்ஷ ஆட்சியை மக்கள் நிராகரித்துள்ளனர். அரசுக்கு எதிராக மக்கள் மத்தியில் கடும் அதிருப்தி உள்ளது. இதனால் மக்களை ஒடுக்குவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. போராட்டங்களை முடக்குவதற்கு பொலிஸார் களமிறக்கப் படுகின்றனர். மறுபுறத்தில் பாராளுமன்றத்தில் அடக்குமுறைச் சட்டங்கள் இயற்றப்படுகின்றன. நிகழ்நிலைக் காப்பு சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், அடுத்ததாக புதிய பயங்கரவாத தடைச் சட்டம் கொண்டுவரப்படவுள்ளது. இந்த சட்டமூலத்துக்கு சிவில் அமைப்புகள் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளன. சர்வதேசமும் எதிர்த்துள்ளன.

பயங்கரவாதிகளை ஒடுக்குவதற்காக அல்ல, நாட்டு மக்களையும், ஊடகங்களையும், அரசியல் கட்சிகளை ஒடுக்குவதற்காகவுமே இப்படியான சட்டமூலங்கள் கொண்டுவரப்படுகின்றன. அடுத்து புனர்வாழ்வு சட்டமூலமும் ஆபத்தானது, அதுகூட அரசியல் நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்படும்.

இவ்வாறு மக்களை அடக்கி ஆளும் இந்த அரசை வீட்டுக்கு அனுப்ப வேண்டும். அதற்கான தலைமைத்துவத்தை நாம் வழங்குவோம். எதிர்வரும் 30ஆம் திகதி பாரிய போராட்டத்தை ஏற்பாடு செய்துள்ளோம் - என்றார். (அ)

# யுத்திய வேலைத்திட்டம் நிறுத்தப்படவேமாட்டாது!

## மீண்டும் கூறினார் டிரான் அலஸ்

கொழும்பு, ஜன. 30

இந்த ஆண்டின் ஜூன் மாத இறுதிக்குள் திட்டமிடப்பட்ட குற்றச் செயல்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல்களை முற்றாக ஒழிப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

நீர்கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

யுக்திய எனப்படும் விசேட போதைப்பொருள் சோதனை நடவடிக்கையை நிறுத்துமாறு எந்தவொரு வெளித் தரப்பினர்களால் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டாலும், நாடு முழுவதும் மேற்கொள்ளப்படும் யுக்திய வேலைத்திட்டம் நிறுத்தப்பட மாட்டாது என அமைச்சர் டிரான் அலஸ் கூறினார். (அ)

# பொருட்கள், பொதிகளின் சேவை கட்டணம் உயர்வு

கொழும்பு, ஜன. 30

பொருட்கள் மற்றும் பொதிகள் சேவைகளுக்கான கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக ரயில் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி, எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி முதல் அமுலாகும் வகையில் இந்த கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக ரயில் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அந்த திணைக்களத்தினால் வெளியிட்டுள்ள அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் இந்த விடயம் அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதியின் எடை மற்றும் கொண்டு செல்லப்படும் தூரம் என்பவற்றின் அடிப்படையில் இதுவரை கட்டணம் அறவிடப்படப்பட்டு வந்தது.

இந்தநிலையில், புதிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், பொதிகள் போக்குவரத்துக்காக அறிவிடப்படும் கட்டணத்துக்கு மேலதிகமாக பொதியின் பெறுமதியின் அடிப்படையிலும் மற்றுமொரு கட்டணம் அறவிடப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, மருந்துகள், வாகன உதிரிப்பாகங்கள், கண்ணாடி மற்றும் மின்சார உபகரணங்களுக்கும் இந்த கட்டணம் அறவிடப்படவுள்ளது. (அ)

# கந்தக்காடு புனர்வாழ்வு மையத்தில் அவசர வேலைத்திட்டம் நடைமுறை

கொழும்பு, ஜன. 30

கந்தக்காடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் முரண்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கான அவசர வேலைத் திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டு வருவதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் தர்ஷன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

போதைப்பொருள் கடத்தல் காரர்களும் புனர்வாழ்வு நிலையங்களில் அனுமதிக்கப்படுவதே குறித்த முரண்பாடுகளுக்கு முக்கிய காரணம் என அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த மாதத்தில் இரண்டு தடவைகள் கந்தகாடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் கைதிகளுக்கு இடையில் மோதல் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

தற்போது நிலைமை கட்டுப்பாட்டுக்குள் உள்ள போதிலும் இதற்கு நீண்டகால தீர்வு காணப்படவேண்டுமென புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி தெரிவித்தார். (அ)

# ஜனாதிபதி நிதியத்தால் வழங்கப்படும் புலமைப்பரிசில் தொகை அதிகரிப்பு!

கொழும்பு, ஜன. 30

2024 ஆம் ஆண்டில் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள, பொருளாதார பிரச்னைகளை எதிர்கொண்டுள்ள மாணவர்களுக்கு வழங்கப்படும் புலமைப்பரிசில் கொடுப்பனவை எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல் 1,000 ரூபாயினால் அதிகரிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

மாணவ, மாணவிகளின் கோரிக்கை தொடர்பில் கவனம் செலுத்திய நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த பணிப்புரையை விடுத்துள்ளார்.

பொருளாதாரச் சிரமங்களுள்ள மாணவர்களை இனங்கண்டு அவர்களின் எதிர்காலத்தை மேம்படுத்தும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் பிரகாரம் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவின் வழிகாட்டலின் கீழ் ஜனாதிபதி நிதியம் இந்த புலமைப்பரிசில் திட்டத்தை நடைமுறைப்படுத்துகிறது.

2021/2022 ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் வழங்கும் திட்டத்தின் கீழ், ஜனாதிபதி நிதியத்தினால் புலமைப்பரிசில் பெறுபவர்களுக்கு மாதாந்தம் 5,000 ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டதுடன் இதுவரை 10 மாதாந்த தவணைகள் செலுத்தப்பட்டுள்ளன.

இதன்படி, புலமைப்பரிசில் தொகை அதிகரிப்புடன், எதிர்வரும் பெப்ரவரி முதல் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் வரை ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் ஜனாதிபதி நிதியிலிருந்து 6,000 ரூபா மாதாந்த உதவித்தொகை வழங்கப்படும்.

மேலும் 2022/2023 ஆண்டு தொடர்பாக க.பொ.த சாதாரண தர பரீட்சையில் உயர்தேர்ச்சி பெற்ற 5,000 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு அந்த மாணவர் க.பொ.த உயர்தர பரீட்சைக்கு தோற்றும் வரை மாதாந்தம் ரூ. 6000 தொகையை வழங்குவதற்காக ஜனாதிபதி நிதியம் தற்போது நடவடிக்கை எடுத்து வருகின்றது. (அ)

# சிறைச்சாலைகளுக்குள் போதைப்பொருள் கடத்துவோருக்கு பொதுமன்னிப்பு இல்லை

கொழும்பு, ஜன. 30

சிறைச்சாலைகளுக்குள் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் சந்தேக நபர்கள் மற்றும் சிறைக்கைதிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் நபர்கள் மற்றும் ஏனைய சிறைக்கைதிகளுக்கு இனி பொதுமன்னிப்பு வழங்கப்பட மாட்டாது என சிறைச்சாலைகள் ஆணையாளர்



நாயகம் துஷார உபுல்தெனிய தெரிவித்துள்ளார்.

ஒன்பது சிறைகளில் புனர்வாழ்வுப் பிரிவுகள் இயங்கி வருவதுடன் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் சிறைகளில் தங்கியிருந்து பல்வேறு தொழில்களை செய்து வருகின்றமை தெரியவந்துள்ளது.

இதன் காரணமாகவே போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் நபர்கள் மற்றும் சிறைக்கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படமாட்டாது என சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(அ)

# சோமாலிய கொள்ளையர் கடத்திய படகை விடுவிக்க கூட்டு கடற்படையின் உதவியைக் கோரும் இலங்கை!

கொழும்பு, ஜன. 30

இலங்கையின் பலநாள் மீன்பிடி படகொன்று சோமாலிய கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்டமை தொடர்பில் விசாரிக்குமாறு பஹ்ரைனில் உள்ள 39 நாடுகளின் கூட்டு கடற்படைக்கு கடற்படையிடம் கோரப்பட்டுள்ளதாக கடற்படையின் ஊடக பேச்சாளர் கப்டன் கயான் விக்ரமசூரிய தெரிவித்துள்ளார்.

சோமாலிய கடற்கொள்ளையர்களால் 6 மீனவர்களுடனான இலங்கையின் பலநாள் மீன்பிடி படகொன்று கடத்தப்பட்டுள்ளதாக கடற்தொழில் திணைக்களம் நேற்று முன் தினம் அறிவித்திருந்தது. அதற்மைய, இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

திக்கோவிட்ட மீன்பிடி துறைமுகத்திலிருந்து கடந்த 12ஆம் திகதி புறப்பட்டுச் சென்றிருந்த 'லொரென்சோ புதா - 4' என்ற பல நாள் மீன்பிடி படகொன்றே இவ் வாறு 6 மீனவர்களுடன் கடத்தப்பட்டுள்ளது. (அ)

# முன்பள்ளி கட்டமைப்பில் முறையாக பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லை!

கொழும்பு, ஜன. 30

நாட்டின் முன்பள்ளி கட்டமைப்பில் முறையாக பயிற்சி பெற்ற 6,000 ஆசிரி யர்கள் மாத்திரமே உள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

19,000 முன்பள்ளிகளில் 34,000 ஆசிரியர்கள் முன் பிள்ளை பருவ அபிவிருத்தியில் ஈடுபட்டுள்ளபோதிலும், அவர்கள் முறையான பயிற்சிகள் எதனையும் பெறவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

எனவே, தற்போது முன் பிள்ளை பருவ அபிவிருத்திக் காக இயங்கிவரும் அனைத்து முன்பள்ளிகளும் தேசிய கல்விக் கொள்கைக்கு அமைவாக பொதுவான கட்டமைப்பில் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கூறினார். (அ)



# மாணவரிடையே அதிகரிக்கும் போதைப்பழக்கம் தடுப்பதில் பெற்றோருக்கே பெரும்பொறுப்புண்டு

## பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜன. 30

பாடசாலைகளில் படையினர் போதைப்பொருள் சோதனைகளை மேற்கொள்ளும் அளவுக்கு மாணவர்களிடையே என்றுமில்லாதவாறு போதைப்பொருட்களின் பாவனை அதிகரித்திருக்கிறது. போதைப்பொருள் பாவனையாளர்களை புனர்வாழ்வு முகாம்களுக்கு அனுப்புகின்ற இராணுவப் பாணி நடவடிக்கைகளையே அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. இதன் மூலம் மாணவர்கள் போதைப்பொருள் பழக்கத்திற்கு ஆளாகுவதைத் தடுக்க முடியாது. மாணவர்களிடையே போதைப்பழக்கம் ஏற்படுவதைத் தடுப்பதில் படைத்தரப்பு, ஆசிரியர்கள் எல்லோரையும் விடப் பெற்றோருக்கே பெரும் பொறுப்பு உண்டு என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சி கடந்த சனிக்கிழமை நாவற்குழியில் இடம்பெற்றது. மாணவர்களும் பெற்றோர்களும் கலந்துகொண்ட இந்நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து உரையாற்றியபோதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இலங்கை அரசாங்கம் இப்போது மேற்கொண்டுள்ள போதைப்பொருளுக்கு எதிரான யுக்திய நடவடிக்கையால் போதைப்பாவனையை நாட்டிலிருந்து முற்றாக ஒழித்துவிட முடியாது. பெரும் வலைப் பின்னலாக இயங்கிக்கொண்டிருக்கும் போதை வியாபாரத்தில் சிக்கிவருவது கடத்தல்காரர்களும் சில்லறை வியாபாரிகளும் போதைப்பொருள் பாவனையாளர்களும் மாத்திரம்தாம். இதில் ஈடுபட்டுள்ள பெரும் முதலாளிகள் அரசஉயர்மட்டங்களின் ஆசீர்வாதத்தோடு பாதுகாப்பாகத்தான் உள்ளார்கள் உறங்கு நிலையில் இருக்கும் இவர்கள் விரைவிலேயே மீள எழுவார்கள்.

கஞ்சாவும் ஹெரோயினும் மாத்திரம்தான் போதைப் பொருள் அல்ல. கைவிடமுடியாத எல்லாப் பழக்கங்களுமே போதைதான். கைவிடமுடியாத அளவுக்கு புகைப்பிடிப்பதும், மது அருந்துவதும் நேரகாலம் பாராது தொலைக்காட்சித் தொடர்களில் மூழ்கிக்கிடப்பதும், இரவில் படுக்கைக்குச் செல்லும் போதும் கைப்பேசிகளுடனேயே செல்வதும் போதைதான். பிள்ளைகள் தங்கள் ஆதர்சவழிகாட்டிகளாக முதலில் பெற்றோர்களையே ஏற்றுக்கொள்கிறார்கள். போதைப்பழக்கங்களுக்கு ஆளாகியுள்ள பெற்றோர்களால் ஒருபோதும் தங்கள் பிள்ளைகளுக்கு வழிகாட்ட இயலாது. பிள்ளைகள் தவறிழைக்கும் போது தட்டிக்கேட்கவும் முடியாது.

பெற்றோர்கள் பாடசாலைகளுக்கும் தனியார் கல்வி நிறுவனங்களுக்கும் பிள்ளைகளை அனுப்பிவைப்பதுடன் தங்கள் கடமைகள் முடிந்துவிட்டதாக நினைக்கிறார்கள். முழுநாட்டையுமே போதைப்பொருட் பாவனை ஒரு புற்றுநோயாகப் பிடித்துவரும் நிலையில் எமது பிள்ளைகள் பெற்றோர்களால் கண்டிப்பாகக் கண்காணிக்கப்படவேண்டும். அவர்களுடைய நண்பர்கள் தொடர்பாகப் பெற்றோர்கள் அறிந்திருக்க வேண்டும். போதைப்பொருட் பாவனை ஒருவழிப்பாதை போன்றது. இதில் ஒருதடவை பிரவேசித்தால் மாணவர்களால் திரும்பிவர முடியாது என்பதைப் பெற்றோர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும்-என்றார். (அ)

# ஜேர்மன் பிரஜையின் கைப்பையை திருடிய குற்றச்சாட்டில் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 30

ஜேர்மன் நாட்டில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த பெண்ணொருவரின் கைப்பையை திருடிய குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டனர்.

சங்கானையைச் சேர்ந்த 28 வயது பெண் மற்றும் 21 வயது ஆண் சகோதரர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களிடம் இருந்து திருடப்பட்ட பொருட்களும் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

திருநெல்வேலி சந்தையில் பொருட்களைக் கொள்வனவு செய்ய வந்த வெளிநாட்டு பெண்ணின் கடவுச்சீட்டு உள்ளிட்ட முக்கிய ஆவணங்கள், 500 யூரோ, 20,000 ரூபாய் அடங்கிய கைப்பையே கைக்குழந்தையுடன் வந்த பெண்ணொருவரால் நூதனமான முறையில் அபகரிக்கப்பட்டது.

திருட்டுச் சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் வெளிநாட்டவரால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

கண்காணிப்பு கமெராவின் உதவியுடன் பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய யாழ்ப்பாண மாவட்ட பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு கீழ் இயங்கும் புலனாய்வுப் பிரிவினர் சந்தேக நபர்களை கைது செய்தனர்.

சந்தேக நபர்களும் திருடப்பட்ட பொருட்களும் மேலதிக நடவடிக்கைக்காக கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டன. (அ)

# பாடசாலை மாணவர்களுக்கான காலணி வவுச்சர்களின் செல்லுபடி காலம் நீடிப்பு

கொழும்பு, ஜன. 30

அரசாங்கத்தினால் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள காலணி வவுச்சர்களுக்கான செல்லுபடியாகும் காலத்தை நீடிக்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன்படி பாடசாலை மாணவர்களின் காலணி வவுச்சர்கள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை அனைத்து காலணி விற்பனை நிலையங்களிலும் செல்லுபடியாகும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# அதிவேகமே விபத்துகளுக்கு காரணம்!

கொழும்பு, ஜன. 30

நேரத்தை மீதப்படுத்துவதனைக் கருத்தில் கொண்டு அதிவேகமாக வாகனம் செலுத்துவதால் அதிவேக வீதிகளில் விபத்துக்கள் அதிகரித்து வருவதாக சுகாதார அமைச்சின் தொற்று அல்லாத பிரிவின் விபத்து தடுப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் தலைவர் டாக்டர் சமிதா சிறிதுங்க தெரிவித்தார்.

மேலும் பாதுகாப்பற்ற முறையில் வாகனங்களைச் செலுத்துவதே இந்த விபத்துக்களுக்கு காரணம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிவேக வீதிகளில் போக்குவரத்து விபத்துக்கள் ஒப்பீட்டளவில் அதிகரித்திருப்பதனை நாங்கள் அவதானித்துள்ளோம்.

எனவே, அதிவேக வீதிகளில் விபத்துக்களை தவிர்ப்பதற்காக அனைவரும் கவனம் செலுத்த வேண்டும் எனவும் விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் சமித்த சிறிதுங்க குறிப்பிட்டார். (அ)

# உண்மை, நல்லிணக்க ஆணைக்குழு நம்பகத்தன்மை கொண்டதாக இல்லை

## சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம்

கொழும்பு, ஜன. 30

போர்க்கால மனித உரிமை மீறல்களை துஷ்பிரயோகங்களை விசாரிப்பதற்கான மற்றுமொரு அமைப்பை உருவாக்குவதற்கு இலங்கை அரசாங்கம்முன்வைத்துள்ள சட்டமானது முன்னைய தோல்வியுற்ற முயற்சிகளை பிரதி பலிப்பதாகவும் பாதிக்கப்பட்டவர்களின் தேவைகளை புறக்கணிப்பதாகவும் இலங்கையின் சர்வதேச கடப்பாடுகளை நிறைவேற்றாததாகவும் காணப்படுகின்றது என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

ஆயுதமோதல்கள் முடிவுக்கு வந்த 15 வருடங்களின் பின்னரும் இலங்கை பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தவர்களை மௌனமாக்கும் ஒடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் கூறியுள்ளது.

2023 ஆம் ஆண்டு இடம் பெற்ற குறைந்தளவு கலந்தா லோசனைகளின் பின்னர் உண்மை ஐக்கியம் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு விற்கான சட்டமூலம் 2024 ஜனவரி முதலாம் திகதி வெளியானது என தெரிவித்துள்ள சர்வதேச மனித உரிமை கண் காணிப்பகம், பிரிவினைவாத தமிழீழ விடுதலைப்புலிகளுடன் 1983 முதல் 2009 வரை இடம் பெற்ற உள்நாட்டு யுத்தத்தின் போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் யுத்த குற்றங் களை விசாரணை செய்வதாக அரசாங்கம் உறுதிமொழி வழங்கியிருந்தது எனவும் தெரிவித்துள்ளது.

1988-89 ஆம் ஆண்டுகாலப் பகுதியில் இடதுசாரி ஜே.வி.பியின் கிளர்ச்சியின் போது இடம்பெற்ற பரந்துபட்ட துஷ்பிரயோகங்களை அரசாங்கம் தவிர்த்திருந்தது எனவும் தெரிவித்துள்ள சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம், உண்மை, நீதி, பரிகாரம் போன்றவற்றை வழங்குவதற்கு பதில் உத்தேச சட்டமூலம் போதியளவு பொறுப்புக்கூறல் இன்மை மற்றும் அநீதிகுற்றங்கள் தொடர்பான சர்வதேச சமூகத்தின் அழுத்தங்களை திசை திருப்புவதை நோக்கமாக கொண்டது எனவும் குறிப்பிட்டுள்ளது. (அ)

# பாடகி பவதாரணிக்கு கொழும்பில் அஞ்சலி!



கொழும்பு, ஜன. 30

மறைந்த பிரபல தென்னிந்திய பாடகியும், இசையமைப்பாளர் இளையராஜாவின் மகளுமான பவதாரணிக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்று கொழும்பில் இடம்பெற்றது.

இலங்கை தமிழ் கலைஞர்கள் மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்நிகழ்வானது, இசையமைப்பாளர் ஸ்ருதி பிரபா தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது பவதாரணியின் உருவ படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் கலைஞர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (அ)

# வற் வரியை பதிவு செய்யாமல் நுகர்வோரிடமிருந்து வசூலிக்கும் நிறுவனங்களை கண்டறிய நடவடிக்கை!

கொழும்பு, ஜன. 30

வற் வரியைப் பதிவு செய்யாமல் அதனை நுகர்வோரிடமிருந்து வசூலிக்கும் நிறுவனங்களைக் கண்டறிய இறைவரி திணைக்களம் சோதனையில் ஈடுபட்டுள்ளதாக திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வற் வரிக்காக பதிவு செய்யப்பட்ட வர்த்தக நிறுவனங்கள் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடும்போது, அவர்களின் வெற் பதிவு எண்ணை நுகர்வோரின் பார்வைக்குக் காண்பிக்கவேண்டியது கட்டாயமாகும்.

இவ்வாறு செயற்படாத வர்த்தக நிறுவனங்கள் தொடர்பில் இறைவரித் திணைக்கள ஆணையாளருக்கு வாடிக்கையாளர்கள் நேரடியாகவே முறைப்பாடு செய்யலாம்.

இதேவேளை, இது தொடர்பில் அதிகளவான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அவவை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (அ)

ஈழநாடு

# பொது செயலர் நியமனத்தை ஏற்றுக் கொள்ளவேமுடியாது!

## கூறுகிறார் சிறிநேசன்




மட்டக்களப்பு, ஜன. 30

இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் நியமனத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் அக்கட்சியின் பொதுச் செயலாளர் பதவிக்காக போட்டியிட்டவருமான ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றில் அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவி உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டிருந்தால், நேற்று முன்தினம் கட்சியின் மாநாடு நடைபெற்றிருக்க வேண்டும்.

பொதுச் செயலாளர் தெரிவில் தமக்கு இணக்கமில்லை என கட்சியிலுள்ள பலர் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இந்த விடயம் கட்சியின் புதிய தலைவரிடமும் பழைய தலைவரிடமும் கட்சியின் உறுப்பினர்கள் அறிவித்திருந்தனர்.

பொதுச்செயலாளர் தெரிவின்போது வாக்களிப்புக்காக அழைக்கப்படாதவர்களும் இருந்துள்ளனர்.

எனவே அந்த வாக்களிப்பு உண்மையிலேயே ஏற்றுக் கொள்ள முடியாதிருந்தது.

எனவே மீண்டும் பொதுச் சபையின் வாக்கெடுப்பின் மூலமாக பொதுச் செயலாளர் பதவிக்குரிய நபரைத் தெரிவுசெய்ய வேண்டும் - என்றார். (அ)



# குழந்தை வைத்திய நிபுணர் பிரேமினிக்கு பிரியாவிடை

அம்பாறை, ஜன. 30

கல்முனை ஆதார வைத்தியசாலையின் குழந்தை நல வைத்திய நிபுணர் டாக்டர் வி. பிரேமினி இடமாற்றம் பெற்று செல்வதையிட்டு பிரியாவிடை நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந் நிகழ்வு வைத்தியசாலையின் கேட்போர்கூடத்தில் வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர். இரா. முரளீஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் தலைமையுரை மற்றும் வரவேற்புரை வைத்தியசாலையின் பணிப்பாளரினால் நிகழ்த்தப்பட்டது.

மேலும் வைத்திய நிபுணர்களினால் குழந்தை நல வைத்திய நிபுணர் டாக்டர் வி. பிரேமினியுடன் பணியாற்றிய அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டனர்.

இதனை தொடர்ந்து வைத்தியசாலையின் பணிப்பாளர், வைத்திய நிபுணர்கள், உத்தியோகத்தர்கள் ஊழியர்களினால் டாக்டர் பிரேமினிக்கு மாலை அணிவித்து, பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னமும் வழங்கப்பட்டு கௌரவிப்பு நிகழ்வும் நடைபெற்றது. (அ)

# கிழக்கு வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலராக கலாநிதி கோபாலரத்தினம்



திருமலை, ஜன. 30

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி காணி அபிவிருத்தி திறன் விருத்தி மகளிர் அபிவிருத்தி நீர் விநியோக துறை அமைச்சின் செயலாளராக இலங்கை நிர்வாக சேவையின் விசேட தர அதிகாரி கலாநிதி மூ.கோபாலரத்தினம் நியமிக்கப்பட்டுள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் இந்த நியமனத்தை வழங்கியுள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் ஆளுநர் மேற்கொண்ட அதிரடி உயர்நிர்வாக மாற்றத்தில் ஓரங்கமாக இவரது நியமனம் இடம்பெற்றுள்ளது.

இலங்கை நிர்வாக சேவை விசேட தர அதிகாரியான இவர், ஏலவே கிழக்கு மாகாண சபையின் பொதுச் சேவை ஆணைக் குழு மற்றும் பேரவைச் செயலாளராக கடமை புரிந்து வந்தார். அதற்கு முன்னர் திறைசேரி முகாமைத்துவ திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகமாக சேவை யாற்றியிருந்தார். (அ)

# திருடப்பட்ட பெறுமதியான மோட்டார் சைக்கிள் மீட்பு!

## ஒருவர் பொலிஸாரால் கைது

அம்பாறை, ஜன. 30

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் ஜனவரி மாதம் 14ஆம் திகதி சுமார் 8 இலட்சம் ரூபாவுக்கும் மேல் பெறுமதி வாய்ந்த மோட்டார் சைக்கிள் திருடப்பட்டுள்ளதாக சைக்கிள் உரிமையாளர் பொலிஸ் நிலையத்தில் கடந்த 16ஆம் திகதி முறைப்பாடு செய்ததாக சம்மாந்துறை பொலிஸார் தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலத் வழிகாட்டுதலில் பொலிஸ் நிலைய பெருங்குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி கே.சதீஸ்கர் தலைமையிலான குழுவினரின் விசாரணை நடவடிக்கைகளை மேற்கொண்ட போது அக்கரைப்பற்று பிரதேசத்தில் இருந்து மோட்டார் பைக்கிளை நேற்று முன் தினம் மீட்டதுடன் திருட்டுச் சம்பவத்தில் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் கூறினர். (அ)

# மட்டக்களப்பு கல்லடி ஹரி சிறுவர் இல்லத்துக்கு கற்றல் உபகரணம் வழங்கிய இணைந்த கரங்கள்




அம்பாறை, ஜன. 30

இணைந்த கரங்கள் உறவுகள் ஊடாக அவுஸ்ரே லியாவில் அமைந்திருக்கும் எக்ஸ்லன்ட் நிறுவன பணிப்பாளர் சௌந்தரராஜன் தெய்வநாயகம் மற் றும் அவரது குடும்பத்தாரின் நிதிப்பங்களிப்போடு தாய் தந்தையை இழந்த மட்டக்களப்பு கல்லடி ஹரி சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் வளரும் 45 மாணவர்களுக்கு நேற்று ச. சந்திர குமார் ஹரி சிறுவர் இல்லத்தின் ஸ்தாபகர் அவர்களின் தலை மையில் கல்விக்கு தேவையான கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப்பைகள் இணைந்த கரங்கள் அமைப்பினூடாக வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் ஹரி சிறுவர் இல்லத்தின் பொருளாளர் அ. குணசேகரம், உறுப்பினர் ஆர். முருகதாஸ் மற்றும் இணைந்த கரங்கள் அமைப்பின் இணைப்பாளர்களான எல்.கஜரூபன், கே.காந்தன், எம்.ஜெகனாதன், ஆர். தினேஸ் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்கள் பாடசாலைக்கு செல்வதற்கான கற்றல் உபகரணங்களை வழங்கினர். (அ)



# ஏறாவூர், கோறளைப்பற்று பயனாளிகளுக்கு நிதியுதவி

அம்பாறை, ஜன. 30

ஏறாவூர் மற்றும் கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலகங்களில் வறுமைக் கோட்டுக்கு கீழே வாழும் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையினால் வீடு மற்றும் மலசல கூடங்களை புனரமைப்பதற்கான நிதி உதவி வழங்கும் நிகழ்வுகள் ஏறாவூர் நகர சபை கேட்போர் கூடம் மற்றும் கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபையின் சபா மண்டபம் ஆகியவற்றில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் வழிகாட்டலில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ஷெய்யித் அலி சாஹிர் மௌலானா தலைமையில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் ஏறாவூர் நகர பிரதேச செயலாளர், சிரேஷ்ட சட்டத்தரணி ஹபீப் றிபான் உட்பட ஏறாவூர் மற்றும் ஓட்டமாவடி உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் தவிசாளர்கள், உறுப்பினர்கள் ,குறித்த உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (அ)

# கொக்கட்டிச்சோலை படுகொலையின் நினைவேந்தல் கிழக்குப் பல்கலையில்



மட்டக்களப்பு, ஜன. 30

28.1.1987 இல் மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் இராணுவத்தினால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட 83 அப்பாவி தமிழ் உறவுகளின் நினைவேந்தல் கிழக்குப் பல்கலைக்கழக தமிழ் மாணவர்களால் நேற்றுமுன் தினம் பொங்கு தமிழ்த் துபியில் முன்பாக ஈகச்சுடரேற்றி முன்னெடுக்கப்பட்டது.

கிழக்குப் பல்கலைக் கழகத்தின் அனைத்துப் பீட தமிழ் மாணவர்களினால் குறித்த நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மாலைதீவு பாராளுமன்றத்தில் மோதிக்கொண்ட எம்.பிக்கள்!

## சமூக வலைத்தளங்களில் வைரலாகும் காணொளி



மலே, ஜன. 30

மாலைதீவு ஜனாதிபதி மொஹமட் மொய்சுவின் அமைச்சரவையில் உள்ள அமைச்சர்கள் தொடர்பாக அந் நாட்டு பாராளுமன்றத்தின் ஒப் புதலுக்காக நேற்று முன் தினம் ஏற்பாடு செய்யப்பட் டிருந்த விசேட கூட்டத்தில் கடும் அமளியும் மோதலும் ஏற் பட் டுள்ளது.

இதுதொடர்பான காணொளி ஒன்று சமூக வலைத் தளங்களில் வெளியாகியுள்ளது. மாலைதீவின் மக்கள் பிரதிநிதி கள் மோதிக்கொள்ளும் காணொளி சமூக வலை தளங்க ளில் வைரலாகி வருகிறது.

ஆளும் கட்சியான மக்கள் தேசிய காங்கிரஸ், அரசாங்கத் திற்கு சார்பான மாலைதீவு முன் னேற்றக் கட்சி மற்றும் எதிர்க் கட்சியான மாலைதீவு ஜன நாய கக் கட்சியின் உறுப்பினர் களுக்கு இடையில் மோதல் ஏற் பட்டது.

ஜனாதிபதி மொஹமட் மொய்சுவின் அமைச்சரவையில் மேலும் நான்கு அமைச்சர் களுக்கு ஒப்புதல் வழங்க எதிர்க் கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்தன.

பாராளுமன்ற உறுப்பினர்க ளுக்கு இடையில் ஏற்பட்ட மோத லில் காயமடைந்த உறுப்பினர் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சபாநாயகர் ராஜினாமா செய்ய வேண்டும் எனவும், ஜனாதிபதி மொஹமட் மொய்சுவின் அமைச்சரவையில் உள்ள அமைச்சர்களுக்கு ஒப்புதல் வழங்கக்கூடாது எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

இந்த நிலையில், அமைச்சர வையில் உள்ள அமைச்சர்க ளுக்கு அனுமதி வழங்காது எதிர்க்கட்சிகள் பொதுப்பணி களை சீர்குலைப்பதாக ஆளும் கட்சியான மக்கள் தேசிய கட்சி குற்றம் சுமத்தியுள்ளது. (அ)



# மாலைதீவின் ஜனாதிபதிக்கு எதிராக பதவி நீக்க தீர்மானம்

மலே, ஜன. 30

மாலைதீவு ஜனாதிபதி மொஹமட் முய்சுவுக்கு எதிராக அந்நாட்டு பிரதான எதிர்க்கட் சியான மாலைதீவு ஜனநாயகக் கட்சி, பதவி நீக்கத் தீர்மானம் கொண்டு வருவதற்கு தீர்மானித் துள்ளது.

இந்தியா போன்ற நட்பு நாடு களுடன் மாலைதீவு அண்மைய காலமாக இராஜதந்திர மோத லில் ஈடுபட்டுள்ள நிலையில் அந் நாட்டு ஜனாதிபதிக்கு எதிராக இந்த தீர்மானம் கொண்டுவரப்படவுள்ளது.

பாராளுமன்றில் பெரும் பான்மையைப் பெற்றுள்ள மாலைதீவு ஜனநாயகக் கட்சி, ஜனாதிபதி மொஹமட் முய்ஸுவை பதவி நீக்கம் செய்வதற்கான பிரேரணையை சமர்ப்பிக்க போதுமான கையெழுத்துக்களை சேகரித்துள்ளதாக அந் நாட்டு ஊடகங்கள் திங்களன்று செய்தி வெளியிட்டுள்ளன.

பிரதான எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர், ஏனைய எதிர்க்கட்சிகளுடன் கூட்டு சேர்ந்து, ஒரு குற்றச் சாட்டுத் தீர்மானத்திற்கு போது மான கையெழுத்துக்களை சேகரித்துள்ளதாகவும் தெரி விக்கப்படுகிறது. (அ)



# பொலிஸ் பாடசாலையில் தீ! 450 வாகனங்கள் தீக்கிரை!!

புதுடில்லி, ஜன. 30

இந்தியா - டில்லி - வஜிரா பாத்தில் உள்ள பொலிஸ் பயிற்சி பாடசாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் 200 கார்கள் மற்றும் 250 மோட்டார் சைக்கிள்கள் எரிந்து நாசமாகியுள்ளன.

நேற்றுமுன்தினம் இரவு மற் றும் நேற்று அதிகாலை இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக சர்வ தேச ஊடகங்கள் தெரிவிக்கின் றன.

பொலிஸ் பயிற்சி பாட சாலையின் 'மல்கானா' எனப் படும் களஞ்சிய பகுதியில் நள்ளி ரவு 12.16 அளவில் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

தீயை கட்டுப்படுத்துவதற்கு நான்கு தீயணைப்பு வாகனங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. எனி னும், ஏனைய பகுதிகளுக்கு தீ வேகமாக பரவியதை அடுத்தது மற்றுமொரு தீயணைப்பு வாக னத்தை வரவழைப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட் டுள்ளன.

மிகுந்த போராட்டத்திற்கு மத்தியில் எட்டு தீயணைப்பு வாகனங்களின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. தீ விபத்தில் உயிர்சேதம் எதுவும் ஏற்பட வில்லை என தெரிவிக்கப்பட் டுள்ளது.

தீ விபத்துக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்பட வில்லை என்பதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசார ணைகளை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (அ)

# மூன்றாம் உலகப்போர் ஏற்பட வாய்ப்புள்ளது!

## ரஷ்யாவுக்கு எச்சரிக்கை விடுத்த உக்ரைன் ஜனாதிபதி

கீவ், ஜன. 30

மூன்றாம் உலகப்போர் ஏற்பட வாய்ப்புள்ளதாக உக் ரைன் ஜனாதிபதி விளாடிமிர் ஜெலென்ஸ்கி ரஷ்யாவுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்கா உட்பட பல ஐரோப்பிய நாடுகள் தமக்கு ஆதரவு வழங்கி வருவதால் அந்த போர் வெகு தொலைவில் இல்லை எனவும் அவர் கூறி யுள்ளார்.

நேட்டோ உறுப்பு நாடு ஒன்றின் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தினால், மற்றொரு உலகப்போர் தவிர்க்க முடியா தது என ஜேர்மன் சான்சலர் ஒலவ் ஸ்கோல்ஸ்,இந்த ஆபத்து குறித்து முன்னறிவிப்பு செய்திருந்தார் எனவும் ஜெலென்ஸ்கி சுட்டிக்காட்டி யுள்ளார்.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் முதல் ஆக்கிரமிப்பின் போது ஜேர்மனி தனது பங்கை சரியா கச் செய்யவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



ரஷ்யாவுடனான போரில் ஐரோப்பிய நாடுகளின் பல வீனங்களை தன்னால் புரிந்து கொள்ள முடிந்துள்ளதாக கூறியுள்ள அவர், உக்ரைனுக்கு பெரிய அளவில் நிதி திரட்ட வேண்டியதன் அவசியத்தையும் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

இந்த நிலையில், அமெரிக்க தேர்தலில் டொனால்ட் டிரம்ப் வெற்றி பெற்றால் உக்ரைன் அமெரிக்காவின் ஆதரவை இழக்குமா? என செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்துள்ள ஜெலென்ஸ்கி, அமெரிக்காவின் கொள்கை ஒரு நபரால் பாதிக்கப்படாது என தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவுக்கும் உக்ரைனுக் கும் இடையில் கடந்த வரு டத்திற்கும் மேலாக போர் நடைபெற்று வருகிறது.ரஷ்ய படையினர் உக்ரைன் பிர தேசங்களை ஆக்கிரமித்து வரு கின்றன.

இந்த நிலையில், அமெ ரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் ஆதரவுடன் உக்ரைன், ரஷ்யாவுக்கு கடுமை யாக போராடி வருகிறது.

உக்ரைன் போர்க் கைதிகளை ஏற்றிச் சென்ற ரஷ்ய விமானம் விழுந்து நொறுங்கியதில் 65 பேர் உயிரிழந்தனர்.

இரு நாடுகளுக்கும் இடை யிலான போர் நீடித்து வரும் நிலையில், தனது நாட்டுக்கான அமெரிக்காவின் நிதியுதவி குறைக்கப்படுவது குறித்து உக் ரைன் கவலை தெரிவித்துள் ளது. (அ

# சூடானில் 52 பேர் சுட்டுக்கொலை!

கார்ட்டூம், ஜன. 30

சூடானின் அபேய் பிரதேசத்தில் கிராமம் ஒன்றில் துப்பாக்கி ஏந்திய நபர்கள் பொதுமக்கள் மீது நடத்திய தாக்குதலில் ஐ.நாவின் இடைக்கால படையின் வீரர் உட்பட 52 பேர் கொல் லப்பட்டுள்ளதாக சூடான் தகவல் துறை அமைச்சர் புல்லிஸ் கோச் தெரிவித் துள்ளார்.

இந்த சம்பவத்தில் மேலும் 64 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த தாக்குதலுக்கான காரணங்கள் இன்னும் தெளிவாக தெரியவில்லை எனவும் காணி பிரச்சினையின் பின்னணி யில் இந்த தாக்குதல் இடம்பெற்றிருக்க லாம் எனவும் சந்தேகம் வெளியிடப்பட் டுள்ளது.

வன்முறையில் ஈடுபட்ட நபர்கள் நூர் பழங்குடியினத்தை சேர்ந்தவர்கள் என வும் அவர்கள் அதிகளவில் ஆயுதங்களை கொண்டுள்ளவர்கள் எனவும் அமைச்சர் கோச் கூறியுள்ளார்.

இந்த ஆயுதம் ஏந்திய நபர்கள் கடந்த ஆண்டு ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக சூடானின் வார்ராப் மாநிலத் திற்கு இடம்பெயர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும் சூடானில் இனக்கல வரம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவ தாக கூறப்படுகிறது.

அபேய்க்கான ஐக்கிய நாடுகளின் இடைக்கால படையின் வீரரின் மரணத் திற்கு காரணமாக இந்த வன்முறையை இடைக்கால படையின் அதிகாரிகள் கண்டித்துள்ளனர்.

அபேயின் பல பகுதிகளில் பழங்குடி இனங்களுக்கிடையில் மோதல்கள் ஏற்பட்டுள்ளதாக அபேய்க்கான ஐநா வின் இடைக்கால படை உறுதிப்படுத்தி யுள்ளது.

# சர்வதேச நாணய நிதியத்தின் 110 நிபந்தனைகள் நிலுவையில்!

கொழும்பு, ஜன. 30

**இலங்கையும் சர்வதேச நாணய நிதியமும் மேற்கொண்ட ஒப்பந்தத்திற்கு அமைவாக இரண்டாம் தவணைக்கு முன்னர் புதிதாக 75 நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.**

இதனால் நவம்பர் மாத இறுதிக்குள் நிறைவேற்ற தவறிய நிபந்தனைகளோடு சேர்ந்து இலங்கை மொத்தமாக 110 நிபந்தனைகளை நிறைவேற்றவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

2023 மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்ட இந்த வேலைத் திட்டதின் பிரகாரம் முன்வைக்கப்பட்ட 73 நிபந்தனைகளில் 60 ஐ இலங்கை நடைமுறைப்படுத்தியுள்ளது. இதில் 13 நிபந்தனைகள் நிறைவேற்றப்படவில்லை.

மேலும் நவம்பர் இறுதிக்குப் பிறகு வரவிருந்த 27 நிபந்தனைகளின் காலக்கெடுவையும் சர்வதேச நாணய நிதியம் மாற்றியமைத்துள்ளது.

அதன்படி மீதமுள்ள 35 நிபந்தனைகளோடு புதிய நிபந்தனைகளோடு இலங்கையின் சர்வ தேச நாணய நிதியத்தின் திட்டத் தில் 110 நிபந்தனைகள் நிலுவையில் உள்ளதாக வெரிடே ரிசேர்ச் தெரிவித்துள்ளது.(அ)

# 24 மணிநேரத்தில் 836 பேர் கைது!

கொழும்பு, ஜன. 30

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் யுக்திய நடவடிக்கையின் கீழ், கடந்த 24 மணிநேரத்தில் மாத்திரம் 836 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து சுமார் 142 கிராம் ஹெரோயின், 95 கிராம் ஐஸ் மற்றும் 1,650 போதை மாத்திரைகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கைது செய்யப்பட்டவர்களில் 6 பேரை தடுப்புக் காவலில் வைக்குமாறும் ஒருவரை புனர்வாழ்வு மத்திய நிலையத்துக்கு அனுப்புமாறும் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. (அ)

# மாணவி மீது பகிடிவதை; ஆறு மாணவர்கள் கைது!

கொழும்பு, ஜன. 30

மாணவி ஒருவரை பகிடிவதைக்கு உள்ளாக்கியமை தொடர்பில் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 6 மாணவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த 14 ஆம் திகதி சமனலவெவ பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டுக்கமைய, மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்படி, குறித்த மாணவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞானம் மற்றும் மொழியியல் கற்கை பீடத்தின் நான்காம் ஆண்டு மாணவர்களே இவ்வாறு கைதாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

கைதானவர்கள் மொரவக்க, ருக்கஹவில, அளுத்தரம, இமதுவ மற்றும் கித்தலவ ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 23 மற்றும் 25 வயதுகளுக்கு இடைப்பட்டவர்கள் என தெரியவந்துள்ளது.

இந்தநிலையில், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சமனலவெவ பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)



# யாழ். பிரதி பொலிஸ்மா அதிபராக காலிங்க ஜெயசிங்க பதவியேற்பு!

யாழ்ப்பாணம், ஜன. 30

யாழ்ப்பாண மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபராக காலிங்க ஜெயசிங்க நேற்றுக் காலை பதவியேற்றார்.

கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவின் பொறுப்பு அதிகாரியாக செயல்பட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் நேற்று சுப நேரத்தில் யாழ்ப்பாணம் மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபராக பதவியேற்றார்.

ஏற்கனவே யாழ்ப்பாண பிரதி பொலிஸ் மா அதிபராக கடமையாற்றிய மஞ்சுள சென ரத் இடமாற்றலாகி கொழும்பு சென்றுள்ள நிலையில் நேற்று புதியவர் பதவியேற்றமை குறிப்பிடத்தக்கது. (அ-03)

# தக்காளியும் விலை அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 30

நுவரெலியா விசேட பொருளாதார மத்திய நிலையத்தில் ஒரு கிலோ தக்காளியின் மொத்த விலை 800 ரூபாவாக அதிகரித்துள்ளது.

கடந்த சில மாதங்களாக பெய்த கனமழையால் நுவரெலியா தோட்டங்களில் பயிரிடப்பட்டிருந்த தக்காளி பயிர் அழிந்து போனதால், பசுமைக் குடில் பயிரிடப்பட்ட மரக்கறி பயிர்கள் மட்டுமே இந்நாட்களில் சந்தைக்கு வருகிறது.

இதன் காரணமாக ஒரு கிலோ தக்காளியின் மொத்த விலை 800 ரூபாயாக அதிகரித்துள்ளது.

நுவரெலியா விசேட பொருளாதார மத்திய நிலையத்தில் ஒரு கிலோ கரட்டின் மொத்த விலை 1,350 ரூபாவாகவும், ஒரு கிலோ கறி மிளகாயின் மொத்த விற்பனை விலை 700 ரூபாவாகவும் அதிகரித்துள்ளது. (அ)

# செல்லக்கதிர்காமம் விபத்தில் ஒருவர் பலி!

கொழும்பு, ஜன. 30

கதிர்காமம் - செல்லக்கதிர்காமம் வீதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தாரென பொலிஸார் தெரிவித்தனர்.

வான் ஒன்றும் லொறியொன்றும் மோதியே இந்த விபத்து சம்பவித்தது.

இந்த விபத்தில் வானில் பயணித்த மேலும் 4 பேர் காயமடைந்துள்ளனர்.

உயிரிழந்தநபர் வானில் பயணித்தவர் எனத் தெரிவிக்கும் பொலிஸார் விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# கைபேசி வாங்குவதற்காக பாட்டியை கொலை செய்தார் 15 வயதுப் பேரன்!

கொழும்பு, ஜன. 30

கையடக்க தொலைபேசி வாங்குவதற்காக பணம் திரட்டும் நோக்கில் தனது பாட்டியை கொலை செய்தார் எனக் கூறப்படும் 15 வயது சிறுவன் பெலியத்தை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பெலியத்த பகுதியில் உள்ள வீடொன்று உடைக்கப்பட்டு சுமார் 4 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் களவாடப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் தொடர்பில் குறித்த சிறுவன் கைது செய்யப்பட்டு, விசாரிக்கப்பட்டுள்ளார். இதன்போதே தனது பாட்டியை கொலை செய்த சம்பவத்தையும் அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

குறித்த சிறுவனும், அவரது 70 வயது பாட்டியும் வசித்துவந்த நிலையில் பாட்டி கடந்த 17 ஆம் திகதி உயிரிழந்துள்ளார். எனினும், மரண பரிசோதனை மேற்கொள்ளப்படாமல் அவருக்கு இறுதி கிரியைகள் நடத்தப்பட்டு, சடலம் அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

தனது பாட்டி அணிந்திருந்த தங்க சங்கிலியை பெறுவதற்காக, அவரின் முகத்தில் தலையணையை வைத்து அமுக்கி கொலை செய்ததாக சிறுவன் பொலிஸாரிடம் கூறியுள்ளார்.

கையடக்க தொலைபேசியொன்றை வாங்குவதற்காகவே இந்த செயலில் ஈடுபட்டுள்ளார் என தெரியவருகின்றனது. பாட்டியின் தங்க சங்கிலி, நண்பர் ஒருவரிடம் அடகு வைக்கப்பட்டுள்ளது. அவர் கடற்றொழிலுக்கு சென்றுள்ளார் என தெரியவருகின்றது.

குறித்த சிறுவனும், அவரது மற்றுமொரு நண்பரும் தங்காலை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட பின்னர் எதிர்வரும் 6 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பாட்டியின் சடலம், விசாரணைகளுக்காக தோண்டி எடுக்கப்படவுள்ளது. (அ)

# மாவனெல்லயில் தீ; 30 கடைகள் தீக்கிரை!



கொழும்பு, ஜன. 30

மாவனெல்லை நகரில் 30 தற்காலிக வர்த்தக நிலையங்கள் எரிந்து தீக்கிரையாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாவனெல்லை நகரின் பஸ் தரிப்பிடத்திற்கு பின்பகுதியில் உள்ள தற்காலிக கடைகளே நேற்று முன் தினம் இரவு இவ்வாறு எரிந்து தீக்கிரையாகியுள்ளன.

பொலிஸார், தீயணைப்புப் படையினர் மற்றும் பொதுமக்கள் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

தீ பரவியமைக்கான காரணம் கண்டறியப்படவில்லையென பொலிஸார் தெரிவித்தனர்.

மாவனல்லை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# பெண்களுக்கு எதிரான வன்முறை; 109 இலக்கத்துக்கு அழையுங்கள்!

கொழும்பு, ஜன. 30

நாட்டில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிக்கும் விசேட வேலைத் திட்டம் ஒன்று அமுல்படுத்தப்படும் என பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

இதன்படி, 109 எனும் புதிய விசேட அவசர தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த இலக்கத்துக்கு அளிக்கப்படும் முறைப்பாடுகளுக்கு 48 மணித்தியாலங்களில் தீர்வு காண உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

வெயாங்கொடை காவல் பிரிவுக்குட்பட்ட சமூக காவல் குழு உறுப்பினர்களுடன் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## அரிசியில்...

"2023 ஆம் ஆண்டில், நாட்டில் சிறு போகத்திலும் பெரும் போகத்திலும் உரங்களை கொள்வனவு செய்வதற்கு நிதி மானியங்களுக்காக சுமார் 2 ஆயிரத்து 200 கோடி ரூபாயை செலவிட்டோம். அத்துடன் நெல் கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் ஆயிரத்து 300 கோடி ரூபாயை செலவிட்டுள்ளது.

இதன்படி 2022ஆம் ஆண்டு 8 மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்ட போதிலும் 2023ஆம் ஆண்டு அரிசி இறக்குமதி செய்யப்படவில்லை. நம் நாட்டு விவசாயிகள் உற்பத்தி செய்த அரிசியை இந்த நாட்டு மக்கள் வருடம் முழுவதும் உட்கொண்டார்கள் என்றே கூற வேண்டும். நெருக்கடியான நிலையிலும், அரிசியில் தன்னிறைவு பெற்றுள்ளதால் இந்த ஆண்டு அரிசியை இறக்குமதி செய்ய எதிர்பார்க்கவில்லை.

கடந்த ஆண்டைப் போலவே வறட்சி மற்றும் வெள்ளத்தால் நெல் விளைச்சல் பாதிக்கப்பட்டது. வறட்சியால் 65 ஆயிரம் ஏக்கரும், கனமழையால் ஒரு இலட்சம் ஏக்கரும் பாதிக்கப்பட்டன. வறட்சியால் ஏற்பட்ட பயிர் சேதங்களுக்கு இழப்பீடு வழங்க அரசாங்கம் 100 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளது. சுமார் 70 கோடி ரூபாய் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது.

மேலும், கனமழையால் பெருமளவில் மரக்கறிப் பயிர்கள் அழிந்ததே மரக்கறி விலை உயர்வுக்கு காரணம். சில விவசாயிகள் ஒரே விவசாய நிலத்தில் பல முறை காய்கறி விதைகளை பயிரிட்டனர். ஆனால், அவை மழையால் அழிந்துவிட்டன. ஆனால், விவசாயிகளுக்கு நாங்கள் வழங்கிய "நெற் ஹவுஸ்'களில் பயிர் செய்தததால், ஓரளவுக்கு மரக்கறிகள் சந்தைக்கு வந்தன.

இன்னும் இரண்டு மாதங்களில் மரக்கறிகளின் விலை இயல்பு நிலைக்குத் திரும்பும். 2024ஆம் ஆண்டில், நமது தேசிய நுகர்வு இலக்கை அடைய நெல், சோளம், உருளைக்கிழங்கு மற்றும் மிளகாய் ஆகிய 4 வகையான பயிர்களின் உற்பத்திக்கு முன்னுரிமை அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

பெரிய வெங்காய பயிர் செய்கையுடன் சின்ன வெங்காய உற்பத்தி வீழ்ச்சியடைந்தது. எனவே, இந்த ஆண்டு மீண்டும் சின்ன வெங்காய பயிர் செய்கையை ஊக்குவிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். இதன்படி, யாழ்ப்பாணம், மொனராகலை, குருநாகல் மாவட்டங்களில் சின்ன வெங்காய செய்கையை பிரபலப்படுத்த தீர்மானித்துள்ளோம்.

இதற்கு இணையாக பெருந்தோட்ட துறையில் பல முக்கிய தீர்மானங்களை இந்த வருடம் நடைமுறைப்படுத்துகின்றோம் - என்றார். (ஐ)

## பகிடிவதை...

இந்த முறை பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப்பட்டுள்ளனர்.

வரலாற்றில் முதன்முறையாக பல்கலைக்கழகங்களுக்கு தெரிவானவர்களின் எண்ணிக்கை இந்த வருடத்தில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப்படும் புதிய மாணவர்களை இலக்கு வைத்து புரியப்படும் பகிடிவதைகள் தொடர்பில் சட்டரீதியான கவனம் செலுத்தப்படும்.

கடந்த வருடத்தில் கிடைக்கப்பெற்ற 80இற்கும் மேற்பட்ட பகிடிவதை தொடர்பான முறைப்பாடுகள் பகிடிவதையுடன் தொடர்புடையனவாக கருத முடியாது.

அதேநேரம், பகிடிவதை தொடர்பான முறைப்பாடுகளுக்கு சுமார் 12 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை வழங்கப்படக்கூடிய வாய்ப்புகள் உள்ளன.

எனவே, பல்கலைக்கழக மாணவர்கள் தமக்கு வழங்கப்பட்டுள்ள சுதந்திரத்தை உரிய வகையில் பயன்படுத்த வேண்டும் என்பதுடன் எதிர்கால நலனை சிந்தித்து செயற்பட வேண்டும் -என்றார். (அ)

## கடற்கொள்ளை...

கரையில் இருந்து 1,160 கடல் மைல் தொலைவில் உள்ள அரபிக் கடலில் சோமாலிய கடற்கொள்ளையர்களால் இந்தப் படகு கைப்பற்றப்பட்டதாக மீன்பிடி கூட்டுத்தாபனத்துக்கு அறிவிக்கப்பட்டது.

இதன்படி, காணாமல்போன படகு தொடர்பில் தேடிப் பார்க்குமாறு இலங்கை கடற்படையினர் பஹ்ரைனில் அமைந்துள்ள 40 நாடுகளை உள்ளடக்கிய கூட்டு கடல் படையணிக்கு அறிவித்தனர்.

சோமாலிய கடற்கொள்ளையர்களால் கைப்பற்றப்பட்ட மீன்பிடி படகைக் கண்டுபிடிக்க சீசெல்ஸ் கரையோரப் பாதுகாப்பு படை விசேட தேடுதல் நடவடிக்கையைத் தொடங்கியது.

சோமாலிய கடற்கொள்ளையர்களின் பிடியில் இருந்த படகை அவர்கள் கண்டுபிடித்னர். அத்துடன், இரண்டு சோமாலிய கடற்கொள்ளையர்களும் சீசெல்ஸ் கரையோர பாதுகாப்பு படையால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், 'லொரன்சோ புத்தா- 4' ஆழ்கடல் மீன்பிடிப் படகில் இருந்த 6 மீனவர்களும் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சோமாலிய கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்ட ஆழ்கடல் மீன்பிடி படகை இலங்கைக்கு கொண்டு வருவதற்கான பணிகள் ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவின் வழிகாட்டலின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தற்போது குறித்த படகு சீசெல்ஸில் உள்ள விக்டோரியா துறைமுகத்திற்கு எடுத்துச் செல்லப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## ஜனாதிபதியின்...

ஜனாதிபதியாக வரமுடியாது என்பதை அறிந்தே இவ்வாறு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கொள்கைப் பிரகடன உரையை வழங்காமலேயே ஜனாதிபதி பதவியை பறிகொடுக்க நேரிடும் என்பதற்காக மீண்டும் பாராளுமன்றக் கூட்டத் தொடரை ஒத்திவைத்துள்ளார்.

தாம் மீண்டும் ஜனாதிபதியாக தெரிவாக மாட்டேன் என்பதை அறிந்து ஜனாதிபதி பதவியை முழுமையாக அனுபவிக்க ரணில் விக்கிரமசிங்க முயற்சிக்கிறார். எதிர்க்கட்சியில் இருந்த போது ஜனநாயகக் கருத்துகளை வெளியிட்ட ரணில் விக்கிரமசிங்க தற்போது அடக்குமுறையை கடைப்பிடித்து வருகிறார்." என என்றார். (அ)

## பொதுச் செயலர்...

பதவி விலகல் கடிதங்களை வழங்கி, பிரச்னைக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்குமாறு முன்னாள் ஜனாதிபதியும் சுதந்திரக்கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன இருவரிடமும் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் பதவியை தற்போது அரசாங்கத்துக்கு ஆதரவளித்து வரும் சுதந்திரக்கட்சியின் அணியை சேர்ந்த எவருக்கும் வழங்க போவதில்லை என மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளதாக கூறப்படுகிறது.

## அரசுக்கு...

பட்டார். பொதுமக்களின் அமைதியை சீர்குலைத்தமை, அரசாங்கத்தின் மீது பொதுமக்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியமை மற்றும் பொதுமக்களை ஆத்திரமடையச் செய்யும் வகையில் காணொலிகளை வெளியிட்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் பியத் நிகேஷல கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பியத் நிகேஷல இன்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார். (அ)

# "அரசியல் இலாபத்துக்கு புதிய சட்டம் பயன்படும்"

கொழும்பு, ஜன. 30

தேர்தல் ஒன்று இடம்பெறவுள்ள நிலையில் இணையப் பாதுகாப்பு சட்டத்தை அரசியல் இலாபத்துக்காக பயன்படுத்தக்கூடும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகசந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மக்களை ஒடுக்குவதற்காக அரசாங்கம் புதிய சட்டங்களை கொண்டுவருகிறது.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் ஊடாக, நீதிமன்ற அனுமதியின்றி ஒருவரை தடுத்து வைக்க முடியும்.

நீதிமன்றத்துக்கு இருக்கும் அதிகாரம், இந்தச் சட்டத்தின் ஊடாக பதில் பொலிஸ் மா அதிபருக்கு செல்லும். தீர்மானிக்கும் அதிகாரம் பாதுகாப்புச் செயலாளருக்கு சென்றுவிடும்.

பாதுகாப்புச் செயலாளர் என்பவர் ஜனாதிபதியால் நியமிக்கப்படும் அதிகாரியாவார். எனவே, தேர்தல் ஒன்று இடம்பெறவுள்ள நிலையில் இந்தச் சட்டத்தை அரசியல் இலாபத்துக்காக இவர்கள் பயன்படுத்தக்கூடும்.

இதனை பயன்படுத்தி மக்களை இவர்கள் ஒடுக்குவார்கள். அதேபோன்றுதான், இணையப் பாதுகாப்பு சட்டமூலத்தையும் இவர்கள் கொண்டுவந்துள்ளார்கள்.

இதன் ஊடாக ஐவர் அடங்கிய ஆணைக்குழுவொன்று ஜனாதிபதியால் ஸ்தாபிக்கப்படவுள்ளது.

இந்த ஆணைக்குழு எவ்வாறு சுயாதீனமாக இயங்கும்? ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட இந்த ஆணைக்குழுவும் அரசியல் குழுவாகத்தான் செயலபடும்" - என்றார். (அ)

# "மொட்டு மாபியாவின் கைப்பாவையே ரணில்"

கொழும்பு, ஜன. 30

மொட்டு மாபியாவின் கைப்பாவையாகவே தற்போதைய ஜனாதிபதி செயலாற்றுகிறார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

"ராஜபக்ஷவுக்கு சொந்தமான மொட்டு மாபியாவின் கைப்பாவையாகவே தற்போதைய ஜனாதிபதி செயலாற்றுகிறார். இந்நாட்டை வங்குரோத்தடைய செய்தவர்களுக்கு எதிராக விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமித்து குற்றம் சாட்டப்பட்டவர்களது பிரஜா உரிமைகளை இல்லாதொழிப்பதற்கு ஏன் நடவடிக்கை எடுக்கவில்லையென ஜனாதிபதியிடம் வினவிய போது அவர் அதனை நகைச்சுவையாக எடுத்துக் கொண்டார்.

மொட்டு கட்சியின் மாபியா மூலம் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டமையே இதற்கு காரணம் மொட்டு கட்சியின் 134 பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் வந்த ரணில், நாட்டை வங்குரோத்தாக்கிய ராஜபக்சர்களை பாதுகாத்து வருகிறார்.

இன்று ஒரு கைப்பாவை ஜனாதிபதியே ஆட்சியில் இருக்கிறார். இந்த கைப்பாவையின் அதிகாரங்கள் ராஜபக்சர்களின் கைகளிலேயே உள்ளன" என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கூறினார்.

## சாந்தனை...

தால் விடுதலை செய்யப்பட்டு ஒரு வருடம் கடந்துள்ள நிலையில், அந்த வழக்கிலிருந்து விடுதலையான இலங்கை பிரஜைகளான சாந்தன், முருகன், ரொபேர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகிய நால்வரையும் இலங்கைக்கு வரவழைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட எந்த முயற்சிகளும் பலனளிக்காததால் இன்று வரை அவர்கள் நால்வரும் திருச்சி சிறப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள் என்பதை தாங்கள் கரிசனையோடு அணுகுவீர்கள் என எதிர்பார்க்கிறேன்.

தனது இளமைக்காலம் முழுவதையும் சிறையில் கழித்து, முதுமைக்காலத்தில் உயிருக்கே ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய சிறுநீரகப் பாதிப்பு, கல்லீரல் பாதிப்பு என்பவற்றால் மிகக்கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள சாந்தன், தற்போது சென்னை மருத்துவமனையின் தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கடந்த 33 ஆண்டுகளாகத் தனது மகனைக் காணாது பரிதவித்திருக்கும் சாந்தனின் தாயார், 77 வயது நிரம்பிய தனது முதுமை நிலையில் ஒரு தடவையாவது தனது மகனை நேரில் பார்வையிட வேண்டும் எனவும் அவரை இலங்கைக்கு வரவழைக்க ஆவன செய்யுமாறும் மிக உருக்கமான வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றதிலிருந்து இவ்விடயத்தை மனிதாபிமான அடிப்படையில் அணுகி நோய்வாய்ப்பட்டிருக்கும் சாந்தனின் உடல்நிலை கருதியும், அவரது குடும்பத்தினரின் உணர்வுநிலைப்பட்ட எதிர்பார்ப்பைக் கருத்திற்கொண்டும் சாந்தன் உள்ளிட்ட நால்வரையும் இலங்கைக்கு அனுப்பிவைக்க ஆவன செய்யுமாறு தங்களைத் தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன். - என்றுள்ளது. (அ)

## சுதந்திர தினம்...

கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கங்கள்.

தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வுக்கு முன்னேற்றகரமான வேலைத்திட்டங்கள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை என்று யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் சார்பில் அதன் தலைவர் கு. துவாரகன் வெளியிட்ட அறிக்கையில்,

"தமிழ் மக்களுக்கான உரிமைகள் மீறப்படுகின்றன. இருப்பு கேள்விக்குறியாகியுள்ளது. அச்சுறுத்தல்கள் தொடர்கின்றன. ஆட்சிகளும் ஆட்சியாளர்களும் மாறுகின்றார்கள். எனினும், தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வு விடயத்தில் இன்றுவரை முன்னேற்றகரமான வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்படவில்லை. அது வெறும் பேசுபொருளாக மாத்திரமே இருக்கின்றது. ஆகவே, இலங்கையின் சுதந்திர தினமான எதிர்வரும் பெப்ரவரி 4ஆம் திகதியை வடக்கு, கிழக்கு தழுவிய கரிநாளாக பிரகடனப்படுத்துகின்றோம்."- என்றுள்ளது.

இதேநேரம், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கங்களும் சுதந்திர நாளை கரிநாளாக பிரகடனப்படுத்தி அன்றைய தினம் கவனவீர்ப்பு போராட்டங்களில் ஈடுபட அழைப்பு விடுத்துள்ளன.

காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்கு நீதி கோரி 14 ஆண்டுகள் போராடி வருகிறோம். இந்தப் போராட்ட காலத்தில் இதுவரை 220இற்கும் மேற்பட்ட தாய்மாரை இழந்துள்ளோம். இவ்வாறான ஒரு சூழலிலேயே நாம் சர்வதேச நீதியை கோரி நிற்கின்றோம். காணாமல் போனோர் பணிமனை, உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு என அனைத்தும் பொய்களே. எம்மை ஏமாற்றுவதற்காகவே இவைகள். எமது பிள்ளைகளுக்கு - பாடசாலை மாணவர்களுக்கு என எவருக்கும் சுதந்திரம் இல்லை. எமது உரிமைக்காக போராடுவதற்கு எமக்கு சுதந்திரம் இல்லை. ஆகவேதான் நாங்கள் பெப்ரவரி 4ஐ கரிநாளாக பிரகடனப்படுத்துகின்றோம். அன்றைய தினம் வடக்கு, கிழக்கின் 8 மாவட்டங்களிலும் கவனவீர்ப்பு போராட்டம் நடைபெறும். இந்தப் போராட்டத்தில் அனைவரும் பங்கேற்க வேண்டும் - என்றும் அவர்கள் கூறினர். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# இ.போ.ச. பஸ்ஸை நடுவழியில் மறித்து சாரதி மீது சரமாரியாக வாள்வெட்டு!

## வன்முறைக் கும்பல் அரியாலையில் அடாவடி

யாழ்ப்பாணம், ஜன. 30

**வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ், அரியாலைப் பகுதியில் வன்முறைக் கும்பலால் இடைமறிக்கப்பட்டது. பஸ்ஸில் ஏறிய 5 பேர் கொண்ட கும்பல் பஸ் சாரதியை சரமாரியாக வாளால் வெட்டியதுடன் பயணி ஒருவர் மீதும் மிக மோசமாக தாக்குதல் நடத்தி காயத்தை ஏற்படுத்தி விட்டு தப்பியோடியுள்ளது.**

நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 9.30 மணியளவில் இந்தச் சம்பவம் நடைபெற்றது.

வவுனியாவிலிருந்து நேற்று முன் தினம் மாலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் நோக்கி பேருந்து பயணத்தை ஆரம்பித்தது. இரவு 8.10 மணியளவில் பரந்தனில் இயந்திரக் கோளாறு காரணமாகபஸ் திடீரென நிறுத்தப்பட்டது.

பயணி ஒருவர், பஸ் ஏன் நிறுத்தப்பட்டது என சாரதியிடம் கேட்டார். பஸ்ஸில் பயணம் செய்த சக பயணி, இதன்போது கேள்வி எழுப்பிய பயணியுடன் தர்க்கத்தில் ஈடுபட்டார். இதற்கிடையில் பஸ்ஸின் இயந்திரக்கோளாறு சரி செய்யப்பட்டது. யாழ்ப்பாணத்தை நோக்கிப் பயணத்தை ஆரம்பித்தது.

இரவு 9.30 மணியளவில் அரியாலையை அண்மித்து பஸ் பயணித்துக்கொண்டிருந்தது. இதன்போது திடீரென வீதியை மறித்து பஸ்ஸினுள் முகத்தை மூடியவாறு 5 பேர் கொண்ட வன்முறைக் கும்பல் ஏறியது. அவர்களில் இருவரின் கைகளில் வாளும், மூவரின் கைகளில் பொல்லுக் கட்டைகளும் இருந்தன.

இயந்திரக் கோளாறு காரணமாக பஸ் நிறுத்தப்பட்டபோது சாரதியிடம் கேள்வி எழுப்பிய நபருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட மற்றைய பயணியை பஸ்ஸிலிருந்து வெளியே இழுத்தெடுத்த வன்முறைக் கும்பல் அவர் மீது மூர்க்கத்தனமாக தாக்குதல் நடத்தியது. இதன்போது சாரதி மீதும் வன்முறைக் கும்பல் வாளால் வெட்டி தாக்குதலை நடத்திவிட்டு அந்த இடத்திலிருந்து தப்பியோடியது.

காயங்களுடனும் சாரதி பஸ்ஸை தொடர்ந்து செலுத்திச் சென்றபோதும் யாழ். மாவட்ட செயலகத்துக்கு அப்பால் அவரால் தொடர்ந்து சாரத்தியம் செய்ய முடியவில்லை. இதனையடுத்து பயணிகள் அனைவரும் வேறொரு பஸ்ஸில் ஏற்றப்பட்டு யாழ்ப்பாண நகரில் இறக்கி விடப்பட்டனர்.

சம்பவத்தில் காயமடைந்த பஸ் சாரதியும் பயணியும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (அ)

# இந்திய மீனவர்கள் 10 பேர் நிபந்தனையுடன் விடுதலை



யாழ்ப்பாணம், ஜன. 30

பருத்தித்துறை கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 10 இந்திய மீனவர்கள் நேற்று திங்கட்கிழமை விடுதலை செய்யப்பட்டனர். பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் இன்றையதினம் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 9 மாதங்கள் சிறை தண்டனை என்ற அடிப்படையில் அவர்கள் இவ்வாறு விடுதலை செய்யப்பட்டனர். மீனவர்களிடம் கைப்பற்றப்பட்ட படகை அரச உடமையாக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

மீனவர்களிடையே கைப்பற்றப்பட்ட கைத்தொலைபேசி உள்ளிட்ட வேறு உடைமைகளை மீள வழங்குமாறு நீதிவான் பொன்னுத்துரை கிருசாந்தன் உத்தரவிட்டார்.

விடுதலை செய்யப்பட்ட 10 மீனவர்களையும் மிரிஹான முகாமிற்கு அனுப்பி, இந்தியாவிற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்குமாறு நீதிவான் நேற்று உத்தரவிட்டார்.

இவர்கள் ஜனவரி 14ஆம் திகதி இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி உள்நுழைந்து மீன்பிடித்த குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை, படகின் உரிமையாளரான முதலாவது சந்தேகநபருக்கு நீதித் துறையின் ஊடாக அழைப்பாணை அனுப்புமாறு உத்தரவிடப்பட்டது. படகு உரிமையாளருக்கான வழக்கு எதிர்வரும் ஒக்ரோபர் 24ஆம் திகதி தவணையிடப்பட்டுள்ளது. (அ)

# பொருளாதார நெருக்கடியால் அடுத்த தேர்தலில் போட்டியிடாதிருக்க 30 வீத எம்.பிக்கள் உத்தேசம்?

கொழும்பு, ஜன. 30

பொருளாதார ரீதியிலான நெருக்கடிகளால் அடுத்து வரும் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடாமல் இருப்பதற்கு தற்போது பாராளுமன்ற உறுப்பினர்களாக உள்ளவர்களில் சுமார் 30 வீதமானோர் தீர்மானித்துள்ளனர் என சிங்கள வார ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

விருப்புவாக்கு முறைமை காரணமாக பெருமளவான பணம் செலவளித்தே அரசியல் வாதிகள் பாராளுமன்றம் தெரிவா கின்றனர் எனவும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் வாகன அனுமதிப் பத்திரத்தை வைத்தே அந்த செலவை அவர்கள் ஈடு செய்து வந்தனர் எனக் கூறப் படுகின்றது.

தற்போது வாகன அனுமதிப் பத்திரம் இடைநிறுத்தப்பட்டுள்ளதால், தேர்தலுக்காக பணம் தேடுவது நெருக்கடியாக உள்ளது என பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தேர்தலுக்கு முன்னர் வாகன அனுமதிப் பத்திரம் கிடைக்காவிட்டால் தாம் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தெரிவித்தனர் எனவும் அந்த செய்தியில் குறிப்பிடப்பட் டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் வாகன அனுமதிப் பத்திரத்தின் பெறுமதி 2 கோடி ரூபாவுக்கும் அதிகம்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகன அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான பண ஒதுக்கீட்டை நிதியமைச்சு தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது.

“பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுமதி பத்திரம் வழங்குவதற்கு இதுவரை தீர்மானம் எட்டப்படவில்லை.” - என்று பாராளுமன்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, எரிபொருள் விலை உயர்வினால் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் சபை அமர்வில் பங்கேற்பதையும், நிகழ்வுகளில் பங்கேற்பதையும் மட்டுப்படுத்தியுள்ளனர் எனவும் தெரியவருகின்றது.

அதேவேளை, கடந்த காலங்களில் இடம்பெற்ற பல்வேறு சம்பவங்களால் அதிருப்தியடைந்துள்ள எம்.பிக்கள் குழுவொன்றும் எதிர்வரும் தேர்தலில் போட்டியிடுவதில்லை என தீர்மானித்துள்ளதாக தெரியவருகின்றது. இவர்களில் பெரும்பாலானவர்கள் மொட்டு கட்சி உறுப்பினர்கள் எனக் கூறப்படுகின்றது. (அ)

உ
குகமயம்

# குகபதமடைந்தார்

**யாழ்ப்பாணம் நல்லூரைச் சேர்ந்த
சுகிர்தாதேவி குமாரதாஸ் மாப்பாண முதலியார்
28.01.2024 அன்று குகபதமடைந்தார்.**

அன்னார் இறைபதமடைந்த அமரர் முதலியார் நமசிவாயம், அமரர் அகிலாண்டநாயகி நமசிவாயம் ஆகியோரின் பாசமிகு மகளும், அமரர் இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியார் அவர்களின் அன்பு மனைவியும், ஷமித்ரா ரமணன், ஷன்ஜீத்தா ராமச்சந்திரன், குமரேஷ் ஷயந்தன குமாரதாஸ் மாப்பாண முதலியார் ஆகியோரின் அன்பு தாயும், ரமணன் ராமசந்திரன், பேராசிரியர் (டாக்டர்) சுதர்சன் ராமசந்திரன், டாக்டர் மிர்ணா குமாரதாஸ் ஆகியோரின் அன்பு மாமியும், ஷர்மதா, ஷரன்யா, (டாக்டர்) ஷனாத், (டாக்டர்) பிரவிநாத், ஹரிஷ்நாத், ஷமாயா, ஷவாராயா, குமரேஷ் அனீஷ்வரா ஆகியோரின் அன்பு பேத்தியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிகிரியைகள் 30.01.2024 செவ்வாய்க்கிழமை அவரது நல்லூர் மாப்பாணர் வளவு இல்லத்தில் இடம்பெற்று நண்பகல் 12 மணிக்கு தகனக்கிரிகைகளுக்காக அமரரது பூதவுடல் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

குமாரதாஸ் மாப்பாணர் குடும்பம்,
மாப்பாணர் வளவு – நல்லூர் – யாழ்ப்பாணம்

# ரணிலுடன் கூட்டு இல்லை!

### திலித் ஜயவீர கூறுகின்றார்

கொழும்பு, ஜன. 30

எதிர்வரும் தேர்தல்களில் ரணிலுடன் கூட்டணி சேரப்போவதில்லை என ஜனதா கட்சியின் தலைவர் திலித் ஜயவீர தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொள்ள முயற்சிக்கப்படுவதாக வெளியான தகவல்களில் உண்மையில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், பாராளுமன்றில் பெண்கள் மற்றும் இளைஞர்களின் பிரதிநிதித்துவத்தை மேம்படுத்துவதற்கான முனைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார். இந்நிலையில், நாட்டில் விவசாயத்துறைக்கான முக்கியத்துவம் குறைந்துள்ளதாகவும் இது பாரிய பிரச்னையாக உருவாகியுள்ளது. - என்றார். (அ)

# மன்னார் வைத்தியசாலையில் பொலித்தீன் பாவனைக்கு தடை

மன்னார், ஜன. 30

மன்னார் பொது வைத்தியசாலை மற்றும் வைத்தியசாலை வளாகத்தினுள் உடன் அமுலுக்கு வரும் வகையில் பொலித்தீன் பாவனை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

மன்னார் வைத்தியசாலை சூழல் மற்றும் பொது இடங்களில் அதிகரித்துவரும் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பாவனையால் சூழல் மாசடைவதையும் அதேநேரம் மழை காலங்களில் சிதறிக்கிடக்கும் பொலித்தீன் பைகளில் இருந்து டெங்கு நுளம்பு பரவல் அதிகரித்து காணப்படுவதன் அடிப்படையிலும் மன்னார் வைத்தியசாலையில் முதல் கட்டமாக பொலித்தீன் பைகளின் பாவனை தடை செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக சிகிச்சைக்காக வருபவர்கள், நோயாளர்களை பார்வையிட வருபவர்கள் பொலித்தீன் பைகளுக்கு பதிலாக உக்ககக் கூடிய அல்லது மீள் பயன்படுத்த கூடிய பைகளை கொண்டுவருமாறு வைத்தியசாலை நிர்வாகம் கோரிக்கை விடுத்துள்ளது.

அதே நேரம் பொலித்தீன் பைகளுடன் வருபவர்களிடம் இருந்து பொலித்தீன் பைகள் வாங்கப்பட்டு மாற்றீட்டு பைகள் தற்காலிகமாக வைத்தியசாலை நிர்வாகத்தினரால் வழங்கி வைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 30.01.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# 2ஆவது டெஸ்டில் ரவீந்திர ஜடேஜா பங்கேற்கமாட்டார்



விசாகப்பட்டினம், ஜன. 30

இங்கிலாந்து அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணியின் சகலதுறை வீரர் ரவீந்திர ஜடேஜா பங்கேற்க மாட்டார் என்று கூறப்படுகின்றது.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி இந்தியா சென்றுள் ;ளது. அங்கு அந்த அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது.

இரு அணிகளுக்கும் இடையிலான முதல் டெஸ்ட் போட்டி கடந்த 25ஆம் திகதி ஆரம்பமானது. இதில், இங்கிலாந்து அணி வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் 5 போட்டிகள் கொண்ட தொடரில் 1-0 என இங்கிலாந்து அணி முன்னிலையில் உள்ளது.

இதையடுத்து, இந்த இரு அணிகளுக்கும் இடையிலான 2வது டெஸ்ட் போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை தொடங்குகிறது. இந்நிலையில், அந்த போட்டியில் இந்திய அணியின் நட்சத்திர சகலதுறை வீரரான ஜடேஜா ஆடுவது சந்தேகம் என்று கூறப்படுகின்றது.

முதல் டெஸ்ட் போட்டியில் தொடைப் பகுதியில் தசைப்பிடிப்பு காரணமாக ஜடேஜா பாதிக்கப்பட்டுள்ளார். இதனாலேயே, இரண்டாவது போட்டியில் அவர் விளையாடுவதில் சந்தேகம் நிலவுகிறது.

முதல் டெஸ்ட் போட்டியில் ஜடேஜா இரு இன்னிங்ஸ்களிமாக 89 ஓட்டங்களை எடுத்ததுடன், 5 விக்கெட்களையும் வீழ்த்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)



## ஆஸி. ஓப்பன் ரென்னிஸ் ஜன்னிக் சின்னர் சம்பியன்

மெல்பர்ன், ஜன. 30

அவுஸ்திரேலியன் ஓப்பன் கிராண்ட்ஸ்லாம் ரென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இத்தாலி வீரர் ஜன்னிக் சின்னர் சம்பியன் பட்டம் வென்றார். இது இவர் வெல்லும் முதலாவது கிராண்ட்ஸ்லாம் பட்டமாகும்.

அவுஸ்திரேலியன் ஓப்பன் கிராண்ட்ஸ்லாம் ரென்னிஸ் போட்டி மெல்பர்னில் நடந்தது. இதில், நேற்று முன்தினம் நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் இறுதிப் போட்டியில் இத்தாலி வீரர் ஜன்னிக் சின்னரும் ரஷ்ய வீரர் டானியல் மெத்வதேவும் மோதினர்.

இந்தப் போட்டியில் ஜன்னிக் சின்னர் 3-6, 3-6, 6-4, 6-4, 6-3 என்ற செற் கணக்கில் டானியல் மெத்வதேவை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை வென்றார்.

முதல் 2 செற்களில் ஆக்ரோஷமாக விளையாடினார் டானியல் மெத்வதேவ். இதனால் முதல் 2 செற்களையும் அவர் 6-3, 6-3 என்ற கணக்கில் வென்றார்.

ஆனால், அடுத்த 3 செற்களிலும் சுதாகரித்து ஆடினார் ஜன்னிக் சின்னர். 3 செற்களையும் வென்றால் மட்டுமே பட்டத்தைக் கைப்பற்ற முடியும் என்பதால் அபாரமாக விளையாடினார்.

கடைசி 3 செற்களிலும் சிறப்பாக விளையாடிய ஜன்னிக் சின்னர் 6-4, 6-4, 6-3 என்ற கணக்கில் செற்களை கைப்பற்றி பட்டத்தை வென்றார். (ஐ)

# தோல்வியால் இந்தியா பின்தள்ளப்பட்டது!



டுபாய், ஜன. 30

இங்கிலாந்துடனான முதல் டெஸ்ட் போட்டியில் தோல்வியை சந்தித்த இந்திய அணி உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிப்பட்டியலில் பின்தள்ளப்பட்டுள்ளது.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது.

இரு அணிகளுக்கும் இடையிலான முதல் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து வென்றது.

இந்நிலையில் இந்த டெஸ்ட் போட்டிக்கு பின் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிப்பட்டியலை ஐ. சி. சி. வெளியிட்டுள்ளது. இதில் மேற்கிந்தியத் தீவுக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியில் தோல்வியை தழுவிய அவுஸ்திரேலிய அணி (55%) முதல் இடத்திலுள்ளது.

தென்னாபிரிக்கா (50%), நியூசிலாந்து (50%), பங்களாதேஷ் (50%) அணிகள் 2 முதல் 4 இடங்களில் உள்ளன. இங்கிலாந்துக்கு எதிராக தோல்வியை சந்தித்த இந்திய அணி (43.33%) 5ஆவது இடத்துக்கு பின்தங்கியது.

இந்தப் பட்டியலில் பாகிஸ்தான் அணி (36.66%) 6ஆவது இடத்திலும், மேற்கிந்தியத் தீவுகள் (33.33%) 7ஆவது இடத்திலும், இங்கிலாந்து (29.16%) 8ஆவது இடத்திலும் இலங்கை (0.00%) 9ஆவது இடத்திலும் உள்ளன.

(ஐ)

# இன்னும் 2 தொடரில் டோனி விளையாடலாம்!

## தீபக் சஹார் தெரிவிப்பு



மும்பை, ஜன. 30

16 ஆண்டுகளாக ஐ. பி. எல். தொடரில் விளையாடி வரும் இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் டோனி சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்காக 5 முறை கிண்ணங்களை வென்று கொடுத்துள்ளார்.

கடந்த தொடரில் கிண்ணத்தை வென்ற டோனி, உடல்நிலை ஒத்துழைத்தால் அடுத்த ஆண்டும் சென்னை அணிக்காக விளையாடுவேன் எனத் தெரிவித்திருந்தார்.

இதனிடையே முழங்காலில் அறுவை சிகிச்சை செய்து கொண்ட டோனி மீண்டும் விளையாடுவாரா என்ற கேள்வி எழுந்தது. எனினும், ஐ. பி. எல். ஏலத்தில் டோனியை சென்னை அணி தக்கவைத்திருந்தது.

இந்த நிலையில், டோனி முழங்கால் காயத்தில் இருந்து முழுமையாக குணமடைந்து விட்டாரெனவும். இன்னும் 2 அல்லது 3 தொடர்களில் அவர் விளையாடலாம் என்றும் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் வேகப்பந்து வீச்சாளர் தீபக் சாஹர் தெரிவித்துள்ளார்.

(ஐ)

# புதிய உலக ஒழுங்கை வடிவமைக்குமா ரஷ்யா? 20ஆவது வால்டாய் மாநாடும் எதிர்வுகூறலும்

ஐங்கரன் விக்கினேஸ்வரா

2004 இல் நிறுவப்பட்ட வால்டாய் கலந்துரையாடல் கழகம், அதன் 20வது கூட்டத்தை ரஷ்யாவின் சோச்சியில் கடந்த வருடம் அக்டோபர் 2 முதல் 5 வரை நடாத்தியது. புதிய உலக ஒழுங்கை வடிவமைப்பதற்கான (New World Order) ரஷ்யா இந்த மாநாட்டை நடாத்தியது.

வால்டாய் கலந்துரையாடல் கழகம் 2004 இல் நிறுவப்பட்டது. முதல் கூட்டம் நடந்த நோவ்கோரோட்டுக்கு அருகில் உள்ள வால்டாய் (VALDAI) ஏரியின் பெயரால் இது பெயரிடப்பட்டது. வால்டாய் கலந்துரையாடல் கழகமானது அறிவுசார் திறன் ரஷ்யாவிலும் வெளிநாட்டிலும் மிகவும் மதிக்கப்படுகிறது.

இந்த வால்டாய் மாநாட்டில் 42 நாடுகளில் இருந்து 140 க்கும் மேற்பட்ட முன்னணி வல்லுநர்கள் கலந்து கொண்டனர். ஜனாதிபதி விளாடிமிர் புடின் கடைசி நாள் மாநாட்டில் கலந்து கொண்டார்.

வால்டாய் மாநாட்டின் கருப்பொருள் மிகவும் சமத்துவமான உலகளாவிய ஒழுங்கிற்கான கருத்தியல் அடித்தளத்தை அமைத்து, நியாயமான பன்முனைவுத் தன்மையுடன், எவ்வாறு அனைவருக்குமான பாதுகாப்பையும் மேம்பாட்டையும் உறுதி செய்வது என்பதாகும்.

**ரஷ்ய - உக்ரைன் போர் நடுவே**

ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையே நடைபெற்று வரும் போர் விரோதங்கள் இருந்து வருகிறது. தெற்கின் பெரும் வல்லரசுகளின் பதிலளிப்பு ரஷ்யாவின் மீது சுமத்தப்பட்டுள்ள ஒருதலைப்பட்சமான பொருளாதாரத் தடைகளின் மத்தியிலும், வால்டாய் மாநாடு நடந்தது.

அமெரிக்க தொடர்ந்து டாலர் ஆதிக்கம் செலுத்தும் அதே வேளையில், எதிர்காலத்தில் குறிப்பாக பிரிக்ஷ் நாடுகள் உலக வர்த்தகத்தில் தங்களது தெரிவுகளை மட்டுப்படுத்தாமல் தங்களின் சொந்த தேசிய நலன் மற்றும் அபிவிருத்தி நிர்ப்பந்தங்களால் வழிநடாத்தப்படும் பொருளாதார மற்றும் வெளியுறவுக் கொள்கையைத் தொடர விரும்புவதை இந்த மாநாட்டில் எதிர்வு கூறப்பட்டது.

**அணுசக்தி விடயத்தில் வால்டாய்:**

அணுசக்தி தொடர்பில் இக்கழகம் அதிகவனம் செலுத்தியது. மாநாட்டில் ரஷ்யாவின் தலைசிறந்த மூலோபாய ஆய்வு அறிஞரும் எமரிட்டஸ் பேராசிரியர் செர்ஜி காரகனோவ் அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவதற்கான நுழைவாயிலைக் குறைக்கின்ற, ரஷ்யாவின் அணுசக்தி கொள்கையில் மாற்றத்தை பரிந்துரைத்த தனது சமீபத்திய எழுத்துக்களை மீண்டும் வலியுறுத்தினார்.



மேற்கத்திய கூட்டணியின் பொறுப்பற்ற நடத்தையால் மூன்றாம் உலகப் போரை நோக்கி மோதல் அதிகரிப்பதைத் தடுப்பதற்கு, உக்ரைனுக்கு வெளிப்படையாக ஆயுதங்களை வழங்கும் மூன்றாவது அணுசக்தி அல்லாத நாட்டிற்கு எதிராக தந்திரோபாய அணு குண்டுகளைப் பயன்படுத்துவதன் மூலமாக தடுப்பின் வினைத்திறனை அதிகரிக்க வேண்டும் என்று அவர் கூறினார். இது நாட்டின் கல்வி மற்றும் கொள்கை



வட்டாரங்களில் பரவலாக விமர்சிக்கப்பட்டது.

**பிரிக்ஸ் நோக்கம்**

உண்மையான உலகப் பொருளாதார ஆளுகையாக பரிணமிப்பதைப் பிரிக்ஸ் நோக்கமாக பார்க்கிறது. பிரிக்ஸ் என்பது தொலைநோக்காகும், ஒரு புதிய உலக ஒழுங்கை வடிவமைப்பதற்கான பொறுப்பை இது ஏற்பதாகவும் அறியப்படுகிறது.

பிரிக்ஷ் உலக ஒழுங்கை மறுசீரமைப்பதற்காக உருவானதுடன், அரச அளவிலான ஈடுபாட்டிற்கு சிந்தனைக் குழுக்கள் மற்றும் பிரிக்ஷ் விளையாட்டு போட்டிகளுக்குச் செல்வதற்கு பரிந்துரைத்தது.

தற்போது 22 நாடுகளில் இந்திய நாணயம் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும், சீனாவின் நாணயம் 120 நாடுகளில் பயன்படுத்தப்படுவதாகவும் கூறப்படுகிறது. பிரிக்ஷ் இன் அனைத்து உறுப்பினர்களும் பிரிக்ஷ் நாணயத்தை உருவாக்கும் அவசரத்தில் இல்லை என்பதுடன், இந்தியா போன்ற சில நாடுகள் இறுதி முடிவை எடுக்க நேரமெடுக்க விரும்புகிறது.

புதிய நாணயமானது உள்ளூர் நாணயங்களை மாற்றீடு செய்யும் நோக்கம் கொண்டதல்ல எனவும், டாலர் முதன்மையான இருப்பு நாணயமாக இருக்கும் என கூறப்பட்டது.

2024 ஆம் ஆண்டில் பிரிக்ஷ் உச்சி மாநாட்டை ரஷ்யா நடாத்துவதுடன், அங்கு பிரிக்ஷ் விளையாட்டுகள் உட்பட பல நிகழ்வுகள் ஏற்கனவே திட்டமிடப்பட்டுள்ளன.

பிரிக்ஷ் உலக சனத்தொகையில் 50 வீதத்துக்கும் அதிகமானவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் உலகளாவிய அமைப்பை படிப்படியாக மாற்றியமைப்பதற்காக தற்போதைய உலகளாவிய நிதியியல், பொருளாதார கட்டமைப்பை மீளக்கட்டமைப்பதாகும்.

பிரிக்ஷ் சர்வதேச உறவுகளில் சிக்கலின் பின்பற்றுகையைக் காட்டுகிறது. ஆனால் உலகின் பிரச்சினைகள் நடைபெறும் பிராந்திய பரிமாணத்தை புரிந்து கொள்வதற்கு அதிகரித்தளவான



பிராந்திய குரல்களுக்கான தேவைப்பாடாகவும் விளங்குகிறது.

உறுதியான சர்வதேச அமைப்பை உருவாக்க இந்த ஆண்டு பிரிக்ஷ் மாநாட்டிற்கு ஆப்பிரிக்க யூனியன் அரசுகளை அழைப்பதற்கு தென்னாப்பிரிக்கா கோரிக்கை விடுத்துள்ளது.

**மாநாட்டின் கருப்பொருள் பன்முகத்தன்மை**

பன்முகத்தன்மை இந்த மாநாட்டின் கருப்பொருளாக இருப்பதால், அதன் அனைத்து அம்சங்களிலும் இது பகுப்பாய்வு செய்யப்பட்டது. இந்த விடயத்தில் குழுவின் வசதிப்படுத்துனரான,

இது வளர்ந்து வரும் புதிய ஒழுங்கை பன்முனைத் தன்மை என்று பார்ப்பதுடன், சர்வதேச உறவுகள் வெவ்வேறு பிரிவுகளில் வெவ்வேறு வேகங்களிலும் நேரங்களிலும் உருவாகி, ஒரு படிநிலை அமைப்புக்குத் தேவையான நிலையான கட்டமைப்பைக்கு உட்படுத்துகிறது.






ஈழநாடு



# சமனற்ற நீதி?

நிலாந்தன்




அண்மையில் யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் ஹூவர் மண்டபத்தில் ஒரு வெளியீட்டு விழா நடந்தது. அமெரிக்காவைச் சேர்ந்த ஈழத் தமிழராகிய ராஜ் ராஜரத்தினத்தின் ‘சமனற்ற நீதி’ என்ற ஆங்கில நூலின் தமிழாக்கம் அது.

ராஜ் ராஜரத்தினம் அமெரிக்காவில் துலங்கிக் கொண்டு மேலெழுந்த ஒரு பங்குச்சந்தை வர்த்தகர். உலகப் பணக்காரர்கள் வரிசையில் முன்னணியில் நிற்கும் தமிழர்களில் ஒருவர். அவர் பங்குச்சந்தை வியாபாரத்தில் ‘இன்சைடர் ரேடிங்’ என்று ஆங்கிலத்தில் கூறப்படும் பங்குச் சந்தையின் ஏற்ற இறக்கங்கள் தொடர்பான ரகசிய தகவல்களைக் கசியவிடுவதன் மூலம் லாபம் ஈட்டும் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின் பெயரில் கைது செய்யப்பட்டு குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டவர். அவருடைய தண்டனைக் காலத்தின் போது சிறையில் இருந்து எழுதத் தொடங்கிய அந்த நூல் முதலில் ஆங்கிலத்திலும் இப்பொழுது தமிழிலும் வெளி வந்திருக்கிறது.

இந்த நூல் பல்வேறு பரிமாணங்களைக் கொண்டது. முதலாவது அது ஒரு தன் வரலாறு. இரண்டாவதாக, அது ஒரு சட்டப் பரிமாணத்தைக் கொண்ட நூல். மூன்றாவதாக, அது பங்குச்சந்தை வாணிபம் தொடர்பான தகவல்களைக் கொண்ட ஒரு நூல். நான்காவதாக, புலம் பெயர்ந்த தமிழ்ச் சமூகம் எப்படிப்பட்ட உச்சங்களைத் தொட்டிருக்கிறது என்பதற்கு உதாரணமாகக் காணப்படும் ஒரு தமிழ் முதலீட்டாளரின் வாக்குமூலம் அது.

இப்பொழுது அந்த நூலைச் சற்று ஆழமாகப் பார்க்கலாம். ராஜ் ராஜரத்தினத்தின் பூர்வீகம் வடமராட்சியில் உள்ள அல்வாய். அவருடைய தகப்பனின் தொழில் காரணமாக சிறுபிராயத்திலேயே குடும்பம் ஊருக்கு வெளியே பயணம் செய்யத் தொடங்குகின்றது. தன்னுடைய பட்டப்படிப்புகளை மேற்கில் தொடர்கிறார். மிக இளம் வயதிலேயே அமெரிக்க பங்குச் சந்தைக்குள் பிரகாசிக்கத் தொடங்குகிறார். உலகின் குறிப்பிட்டுச் செல்லக்கூடிய தமிழ் முதலீட்டாளர்களில் ஒருவராக வெற்றி பெறுகிறார்.

2000 ஆவது ஆண்டின் முதல் தசாப்தத்தின் இறுதிக் கட்டத்தில் அமெரிக்கா பொருளாதார மந்த நிலைக்குள் சிக்கியது. அந்த பொருளாதார நெருக்கடியின் போது ராஜ் கைது செய்யப்படுகிறார். அமெரிக்காவின் பொருளாதாரத் தோல்விகளுக்கு ஒரு பலியாட்டை முன்நிறுத்த வேண்டிய தேவை ஏற்பட்டது என்றும், அதற்கு தன்னைப் போன்றவர்களை அவர்கள் கைது செய்து தண்டித்ததாகவும், ராஜ் குற்றம் சாட்டுகிறார்.

தன்னை கைது செய்த எஃப்.பி.ஐ அதிகாரிகளுக்கு பங்குச் சந்தை பற்றி எதுவும் தெரிந்திருக்கவில்லை என்றும், தன்னை விசாரித்தவர்களுக்கும் தெரிந்திருக்கவில்லை என்றும், தனது வழக்கறிஞர்களில் பெரும்பாலானவர்களுக்கு அது தெரிந்திருக்கவில்லை என்றும், தன்னைக் குற்றவாளியாகக் கண்ட ஜூரிகளுக்கும் அது தெரிந்திருக்கவில்லை என்றும், தன் மீது புனைவுகளை அவிழ்த்துவிட்ட அமெரிக்காவின் ஸ்தாபிக்கப்பட்ட ஊடகங்களுக்கும் அது பற்றித் தெரிந்திருக்கவில்லை என்றும் அவர் குற்றம் சாட்டுகிறார்.

தன்னோடு கூட இருந்து லாபமடைந்தவர்களும், தன்னோடு நெருக்கமாகப் பழகியவர்களும் தனக்குத் துரோகம் செய்ததாக அந்த நூலில் அவர் விவரிக்கின்றார். அவர்களுடைய பெயர்களைக் குறிப்பிட்டு, அவர்களுக்கு என்று ஒவ்வொரு அத்தியாயங்களை ஒதுக்கி, அவர்கள் மீது கடுமையான வார்த்தைகளில் குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றார்.

தன்னைக் காட்டிக் கொடுத்தவர்கள் மீது மட்டுமல்ல, அமெரிக்காவின் நீதிபரிபாலானக் கட்டமைப்பையும் அவர் மிகக் கூர்மையான வார்த்தைகளால் விமர்சிக்கின்றார். அந்த அடிப்படையில் இந்த நூல் அமெரிக்காவின் நீதிபதிபாலனக் கட்டமைப்பை, அதன் விசாரணைப் பொறிமுறையை, மிகக் கடுமையாக விமர்சிக்கும் ஒரு நூல் எனலாம். அப்படி ஒரு நூலை அமெரிக்கா எப்படி சகித்துக் கொள்கிறது? அப்படி ஒரு நூல் இலங்கையில் வெளியிடப்பட்டிருந்திருந்தால், அந்த நபர் நீதிமன்ற அவமதிப்பின் கீழோ அல்லது வேறு குற்றச்சாட்டுகளின் பெயராலோ மீண்டும் கைது செய்யப்படக்கூடிய ஆபத்து உண்டு. ஆனால் அமெரிக்க ஜனநாயகத்தின் விரிவை அந்த நூல் காட்டுகிறது.

ஒருபுறம் அந்த நூல் அமெரிக்க நீதி பரிபாலான கட்டமைப்பின் மீதான மிகக் கூர்மையான கடும் வார்த்தைகளால் ஆன விமர்சனமாக காணப்படுகின்றது. இன்னொரு புறம், அந்த நூல் அமெரிக்க ஜனநாயகத்தின் செழிப்பையும் நமக்குக் காட்டுகின்றது.

ராஜ் ராஜரத்தினம் கூறுகிறார், அமெரிக்க நீதி சமனற்றது என்று. அதற்கு அவர் ஆதாரங்களைத் தொகுத்துக் காட்டுகிறார். இன்சைடர் ட்ரேடிங் என்று அழைக்கப்படும் பங்குச் சந்தை உள் விவரங்களைக் கசிய விடுகின்ற, அல்லது உள் ஆட்களின் மூலம் பங்குச் சந்தை உள் விவரங்களை ரகசியமாக திரட்டுகின்ற நடவடிக்கைகள் அமெரிக்காவில் சட்டவிரோதமானவைகளாக இருந்த ஒரு காலகட்டத்தில் அவர் கைது செய்யப்படுகிறார். ஆனால் அதற்காக அமெரிக்கா கையாண்ட வழிமுறைகள் அநீதியானவை என்று அவர் கூறுகிறார். அதே குற்றச்சாட்டுக்கு இலக்கானவர்கள் சிலர் கைது செய்யப்படாததையும் அவர் தொகுத்து காட்டுகின்றார். தன்னைக் கைது செய்வதற்காக அமெரிக்க உள்ளகப் புலனாய்வுத் துறை ஆனது தன்னோடு சேர்ந்து வேலை செய்தவர்கள் அல்லது தனக்கு தெரிந்தவர்கள் போன்றவர்களை எவ்வாறு எனக்கு எதிரான சாட்சிகளாக மாற்றியது என்பதையும் அவர் கூறுகிறார். குற்றமழைத்தவர்களை அக்குற்றத்திலிருந்து விடுவிப்பது என்ற வாக்குறுதியின் பெயரில் அரசுதரப்பு சாட்சிகளாக மாற்றும் நடைமுறையை அவர் அம்பலப்படுத்துகின்றார். தனக்கு வழங்கப்பட்ட நீதி சமனற்றது என்பதனை அவர் அந்த நூல் முழுவதிலும் ஸ்தாபிக்கின்றார்.

ஒரு உலகப் பேரரசின் நீதியானது வெளியில் இருந்து பார்ப்பவர்களுக்கு தெரிவது போல புனிதமானது அல்ல என்று அவர் நிரூபிக்க முற்படுகின்றார். அது ராஜ்ஜூடைய தனிப்பட்ட அனுபவம். பேரரசுகளின் நீதி அல்லது உலக சமூகத்துக்கு ஜனநாயகத்தை, நீதியை அறத்தைப் போதிக்கும் மேற்கத்திய நாடுகளின் நீதியெனப்படுவது எப்படிப்பட்டது என்பதற்கு வரலாறு முழுவதிலும் உதாரணங்கள் உண்டு.

கிராம்சி கூறுவது போல மேற்கத்திய நாடுகள் தமது நாட்டின் பிரஜைகளுக்கு ஜனநாயகத்தை வழங்குகின்றன. ஆனால் தாங்கள் ஆக்கிரமித்த நாடுகளில் அவை அவ்வாறு நடந்து கொள்ளவில்லை, அல்லது ஆக்கிரமிப்புத் தேவைகளுக்காக அவை தாங்கள் போதிக்கும் ஜனநாயகம், நீதி, அரசியல் அறம் போன்ற எல்லாவற்றையும் தலைகீழாக வியாக்கியானம் செய்கின்றன.

உதாரணமாக ஈராக்கிற்குள் மேற்கு நாடுகள் படையெடுத்தபோது அங்கே மனித குலத்துக்குத் தீங்கான ஆயுதங்கள் இருப்பதாக குற்றம் சாட்டினர். ஆனால் அப்படிப்பட்ட ஆயுதங்கள் எவையும் இன்றுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. அது தொடர்பான உட் தகவல்களை அதில் சம்பந்தப்பட்டவர்களே பின்னாளில் தங்கள் வாக்குமூலங்களின் மூலம் வெளிப்படுத்தினார்கள். ஆனால் ஈராக் சிதைக்கப்பட்டு விட்டது. ஆசியாவின் மிகச் செழிப்பான நாகரிகம் ஒன்று சிதைக்கப்பட்டு விட்டது. அதை சிதைப்பதற்காக கூறப்பட்ட காரணம் உண்மையற்றது. ஆதாரம் அற்றது. இதுதான் மேற்கு நாடுகளின் நீதி.

ஏன் அதிகம் போவான்? காசாவில் இப்பொழுது என்ன நடந்து கொண்டிருக்கிறது? இஸ்ரேல் புரியும் இனப்படுகொலையை எல்லாம் மேற்கு நாடுகளும் மௌனமாக அங்கீகரித்துக் கொண்டிருக்கின்றன. அதற்கு எதிராக ஆப்பிரிக்க நாடாகிய தென்னாபிரிக்கா உலக நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்திருக்கின்றது. உலக நீதிமன்றத்தை ஸ்தாபித்த பொழுது அமெரிக்காவும் பிரித்தானியாவும் பெரிய பங்களிப்பை நல்கின. ஆனால் தென்னாபிரிக்கா தொடுத்திருக்கும் வழக்கிற்கு எந்த ஒரு மேற்கத்திய நாடும் உத்தியோகபூர்வமாக ஆதரவைக் காட்டவில்லை.

இங்கு மேலும் ஓர் உதாரணத்தைக் காட்டலாம். ரஷ்யா உக்ரேனுக்குள் இறங்கிய பொழுது, அதை மேற்கு நாடுகள் எதிர்த்தன. புட்டின் புரிவது இனப்படுகொலை என்று குற்றஞ்சாட்டும் அமெரிக்கா இஸ்ரேல் காசாவில் புரிவது இனப்படுகொலை என்று கூறத் தயார் இல்லை. எனவே இங்கே எது நீதி என்பதனை எது தீர்மானிக்கின்றது?

நிச்சயமாக அறநெறிகளோ நீதி நெறிகளோ அல்ல. அரசுகளின் உலகத்தில் தூய நீதி கிடையாது. அது ஈழத் தமிழர்களுக்கு முன்மொழியப்பட்ட நிலைமாறு கால நீதியாகட்டும் அல்லது ஈழத் தமிழர்கள் கேட்கின்ற பரிகார நீதியாகட்டும், எதுவானாலும் அது அரசுகளின் நீதி தான். அதாவது அது ஒர் அரசியல் தீர்மானம். அரசுகள் தமது ராணுவ அரசியல் பொருளாதார நோக்கு நிலைகளில் இருந்து தீர்மானங்களை எடுக்கின்றன. நிச்சயமாக அறநெறிகளின் அடிப்படையில் அத் தீர்மானங்கள் எடுக்கப்படுவதில்லை.

ரஷ்யாவுக்கு எதிரான தீர்மானம் நேற்றோவின் நோக்குநிலையில் இருந்து எடுக்கப்படுகின்றது. அப்படித்தான் ரஷ்யா கிரீமியாவை ஆக்கிரமித்ததும் நீதியின் அடிப்படையில் அல்ல. அங்குள்ள ரஸ்ய மொழியைப் பேசும் மக்களை பாதுகாப்பதற்காக என்று கூறப்பட்டவை எல்லாம் பிரதான காரணங்கள் அல்ல. பிரதான காரணம் உக்ரைனைப் பலவீனப்படுத்துவது.

இந்தியா பங்களாதேஷை பிரித்தெடுத்தது. அது பங்களாதேஷின் மீது கொண்ட காதலால் அல்ல. பாகிஸ்தானை உடைக்க வேண்டும் என்ற பாதுகாப்பு நோக்கு நிலையில் இருந்து எடுக்கப்பட்ட முடிவு அது.

இங்கே பெரிய நாடு சிறிய நாடு என்ற வேறுபாடு இல்லை. அரசுகள் தங்களுடைய ராணுவ பொருளாதார அரசியல் நோக்குநிலைகளில் இருந்து நீதிகளை வழங்கி வருகின்றன. இப்பொழுது இனப்படுகொலைக்கு உள்ளாகும் பலஸ்தீனம் 2009இல் ஈழத் தமிழர்களின் பக்கம் நின்றதா? இல்லை. போராடி விடுதலை பெற்ற கியூபா ஈழத் தமிழர்களின் பக்கம் நிற்கின்றதா? இல்லை. 1980 களின் பிற்பகுதியில் பலஸ்தீன் அதிகார சபை உருவாக்கப்பட முன்னரான ஒரு காலகட்டத்தில் பலஸ்தீனம் ஈழத் தமிழர்களுக்கு பயிற்சி வழங்கியது. ஆனால் பலஸ்தீன் அதிகார சபை உருவாக்கப்பட்ட பின் அது மஹிந்த ராஜபக்சவுக்குத் தான் நட்பாகக் காணப்படுகின்றது. மஹிந்த ராஜபக்சவுக்கு 2014 ஆம் ஆண்டு அந்நாட்டின் உயர் விருது ஆகிய பலஸ்தீன நட்சத்திரம் விருது வழங்கப்பட்டது. அங்குள்ள வீதி ஒன்றுக்கு அவருடைய பெயர் சூட்டப்பட்டது.இவை அனைத்தும் 2009 மே மாதத்துக்குப் பின் நிகழ்ந்தவை.

எனவே இப்பொழுது நமக்கு தெளிவான ஒரு சித்திரம் கிடைக்கின்றது. அரசுகளின் நீதி எத்தகையது என்று.

ஆனால் ஈழத் தமிழர்கள் அதே அரசுகளிடம்தான் நீதியைக் கேட்டுப் போராடுகிறார்கள். ஐநாவில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக தீர்மானங்களைக் கொண்டு வரும் நாடுகள்தான் காசாவில் பாலஸ்தீனர்களுக்கு எதிராகக் காணப்படுகின்றன. இங்கே யார் யாரை ஆதரிப்பது? எப்பொழுது ஆதரிப்பது? என்பவையெல்லாம் நீதியின் பாற்பட்டு முடிவெடுக்கப்படுவதில்லை. நலன்களின் பாற்பட்டு முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

இப்படிப்பட்ட அரசுகள் அல்லது பேரரசுகள் தனி மனிதர்களுக்கு மட்டும் நீதியை வழங்கும் என்று எப்படி எதிர்பார்க்கலாம்?

இப்படிப்பட்டதோர் உலக நீதியின் பின்னணியில், ராஜரத்தினம் எங்கே நமக்கு முக்கியமானவராகத் தெரிகிறார்? அவருக்கு தண்டனை வழங்கப்பட்டு அதை அவர் அனுபவித்த பின்னர்தான் வெளியே வந்திருகிறார். ஆனால் தனக்கு எதிராக வழங்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து அந்த நூலை எழுதுகிறார்.

அது ஒரு உலகப் பேரரசின் நீதிக்கு எதிரான புத்தகம் மட்டுமல்ல, புலம் பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் நிதி ரீதியாக உச்சத்தை தொட்ட ஒருவர் அந்தப் போராட்டத்தை முன்னெடுத்திருக்கிறார் என்பது இங்கு முக்கியம். இது புலம் பெயர்ந்த தமிழர்களுக்கும் தாயகத்தில் வசிப்பவர்களுக்கும் ஒரு கூர்மையான செய்தியை வெளிப்படுத்துகின்றது.முதலாவது செய்தி, ஈழத் தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் கடும் உழைப்பின் மூலம் எந்தளவுக்கு முன்னேறலாம் என்பது. இரண்டாவது செய்தி, நீதிக்காகப் போராடுவதற்கும் நிதிப் பலம் இருக்க வேண்டும் என்பது.

ராஜ் ஒரு கோடீஸ்வரனாக இருந்த காரணத்தால், தனக்கு வழங்கப்பட்ட நீதியை எதிர்த்துப் போராடினார். அப்படித்தான் ஈழத் தமிழர்களும் நீதி கேட்டுப் போராடுவது என்று சொன்னால், பொருளாதார ரீதியாக தங்களை பலப்படுத்த வேண்டும். அப்படிப்பட்ட பலம் இல்லாத காரணத்தால்தான் அண்மை மாதங்களாக தாயகத்தில் இருந்து மூன்றாவது புலப்பெயர்ச்சி அலை ஒன்று நிகழ்ந்து கொண்டிருக்கிறது. தமிழ் மக்களின் ஜனத்தொகை படிப்படியாகக் கரைந்து போகின்றது. எனவே தமிழ் மக்கள் நிதி ரீதியாகப் பலமானவர்களாக மாற வேண்டும். புலம் பெயர்ந்த தரப்பில் இருக்கும் முதலீட்டாளர்கள் தாயகத்தில் முதலீடு செய்ய வேண்டும். அந்த முதலீடுகள் கொழும்பின் நோக்கு நிலையில் இருந்தன்றி, தமிழ் நோக்கு நிலையில் இருந்து, தமிழ்த் தேசிய நோக்கு நிலையில் இருந்து, தேச நிர்மாணத்தின் ஒரு பகுதியாக, முதலீடு என்ற

(16ஆம் பக்கம் பார்க்க)

# முன்னாள் அரசாங்க அதிபருக்கு ஊடக அமைப்பினால் கௌரவம்

அம்பாறை, ஜன. 30

ஒய்வுபெற்ற அரசாங்க அதிபரும் முன்னாள் பிரதேச செயலாளருமான சம்மாந்துறையைச் சேர்ந்த ஐ. எம். ஹனீபா அவர்களின் நற்பணியைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் அட்டாளச் சேனையில் இடம் பெற்றது

நாம் ஊடகர் பேரவை“ மற்றும் ருஹூணு லங்கா“ அமைப்பு ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த ”நம்மவரைக் கொண்டாடுவோம்” எனும் நிகழ்விலேயே இந்த கௌரவம் வழங்கப்பட்டது

‘நாம் ஊடகர் பேரவை’ தலைவரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான யூ.எல். மப்றூக் தலைமையில் அட்டாளைச் சேனை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்ற இந் நிகழ்வில் தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர், அட்டாளைச் சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. சாபிர் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம். ஹனீபா, பொத்துவில் பிரதேச செயலாளர் சட்டத்தரணி எம்.ஐ.எம். பிர்னாஸ், தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ.எல்.எம். ஹனீஸ், அட்டாளைச் சேனை பிரசே உதவிச் செயலாளர் சட்டத்தரணி நஹீஜா முஸாபிர், ருஹூணு லங்கா தலைவரும் அட்டாளைச்சேனை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தருமான எம். எஸ்எம். ஜவ்பர், ‘நாம் ஊடகர் பேரவை’ செயலாளர் றிசாத் ஏ காதர் , அட்டாளைச்சேனை பெரிய பள்ளிவாசல் முன்னாள் தலைவர் சட்டத்தரணி எம்.எஸ். ஜுனைதீன் உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர் . (அ)



# சமனற்ற நீதி....

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)
அடிப்படையில் முன்னெடுக்கப்பட வேண்டும்.

தேசத்தை நிர்மாணிக்கத் தேவையான கட்டமைப்புகளை புலம்பெயர்ந்த தமிழர்கள் தாயகத்தில் கட்டியெழுப்ப வேண்டும்.

சமனற்ற நீதி நூல் வெளியீட்டின் போது நான் ஆற்றிய உரையில் அதை யூதர்களின் தேசிய நிதியத்யோடு ஒப்பிட்டேன். முதலாவது சியோனிச மாநாடு 1897 ஆம் ஆண்டு இடம்பெற்றது. அதிலிருந்து 5 ஆண்டுகளில் அதாவது 1901 ஆம் ஆண்டு “ஜூவிஸ் நஷனல் ஃபண்ட்” என்று அழைக்கப்படும் யூத தேசிய நிதியம் உருவாக்கப்பட்டது. அந்த நிதியம் தான் இப்போதிருக்கும் இஸ்ரேலைக் கட்டி எழுப்பக் காரணம். அந்த நிதியத்தைப் பயன்படுத்தி பலஸ் தீனர்களின் நிலங்கள் விலைக்கு வாங்கப் பட்டன. அங்கு கொமியூன்கள் என்று அழைக்கத்தக்க கூட்டுப் பண்ணைகள் உருவாக்கப்பட்டன. அக்கூட்டுப் பண்ணைகளின் விரிவாக்கமே இஸ்ரேல் என்ற நாடு. இந்த விடயத்தில் யூதர்கள் பலஸ்தீன்களை ஏமாற்றினார்கள் இனப் படுகொலை செய்தார்கள் என்பவையெல்லாம் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும்.

இஸ்ரேலை ஒரு முன்னுதாரணமாகக் காட்டுவதன் மூலம் இக்கட்டுரையானது யூதர்கள் பாலஸ்தீனர்களை இனப்படுகொலை செய்வதை நியாயப்படுத்தவில்லை. ஆனால் புலம்பெயர்ந்த சமூகம் ஒன்று தாயகத்தில் எவ்வாறு ஒரு தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கு நிதி ரீதியாகப் பங்களிப்பை நல்க முடியும் என்பதற்கு அது ஒரு முன்னுதாரணம். ராஜ் ராஜரட்னத்தைப் போன்ற புலம்பெயர்ந்த தமிழர்களை தேசத்தை நிர்மாணிப்பது ஏன்ற அடிப்படையில் எவ்வாறு தாயகத்தில் முதலீடு செய்ய வைப்பது என்று ஈழத் தமிழர்கள் சிந்திக்க வேண்டும். ஏற்கனவே ஒரு தொகுதி புலம்பெயர்ந்த தமிழர்கள் தாயகத்தில் வெவ்வேறு தொழில்துறைகளில் முதலீடு செய்யத் தொடங்கி விட்டார்கள். இந்த முதலீடுகளை நெறிப்படுத்தக்கூடிய ஒரு கட்டமைப்பை ஈழத் தமிழர்கள் புலம் பெயர்ந்த தமிழர்களோடு இணைந்து உருவாக்க வேண்டும். எதையும் கட்டமைப்புக்குள்ளால் சிந்திக்க வேண்டும். அரூபமாகச் சிந்திப்பதால் பயனில்லை. கற்பனைகளில் மிதப்பதால் பயனில்லை. செயலுக்குப் போக வேண்டும்.

நீதிமான்களிடம் தான் ஈழத்தமிழர்கள் நீதியைக்கேட்கலாம் என்றால் அதற்கு ஒன்றில் யாகங்கள் செய்ய வேண்டும், அல்லது பரலோக ராஜ்ஜி யத்தில் வழக்குத் தொடுக்க வேண்டும். ஓர் ஆபிரிக்கப் பழமொழி கூறுவதுபோல... நீ நீதியாக இருக்கிறாய் என்பதற்காக உலகம் உன்னிடம் நீதியாக நடக்கும் என்று எதிர்பார்க் காதே. அப்படி எதிர்பார்ப்பது, நீ சிங்கத்தைச் சாப்பிட மாட்டாய் என்பதற் காக சிங்கம் உன்னைச் சாப்பிடாது என்று நம்புவதைப் போன்றது.

(ஆதவன் செய்தி)

